தென்றல்

மலர் 4 :: 10-8-57—சனி :: இதழ் 6

தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

நான் எழுத்தாளன் ஆனேன்



'நான் ஒரு கதை எழுதி வைத்திருக்கிறேன். உங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கவேண்டும்'- கையிலிருந்த எண்பது பக்க நோட் புத்தகத்தை நீட்டி மிகவும் பணிவான குரலில் அவன் சொன்னான்.

ஏதோ எழுதிக்கொண்டிருந்த ஆசிரியர் தன் கண்ணுடிக்கண்களை மெதுவாகத் தூக்கி அவனைப் பார்த்தார்.

'என்ன எழுதியிருக்கிருய்...?' என்று இழுத்தார்.

மிகவும் பயத்தோடு 'கதை...' என்ருன் அவன்.

'கதையா...?' ஆசிரியர் ஓங்கிச் சிரித்தார்.

நீயெல்லாம் ஏனப்பா கதை எழுதுகிருய்! போய் வேறு ஏதாவது நல்ல வேலையைப் பார். கதை எழுதுவதொன்றும் சாமான்யமான வேலையல்ல...' என்ருர்.

ஆமை தலையை ஓட்டுக்குள்ளே இழுப்பதுபோல், நீட்டிய நோட் புத்தகத்தை பின்னுக்கு இழுத்துக்கொண்டு, தலை குனிந்து வெளியேறினுன் அவன். ஆசிரியரின் அந்தச் சிரிப்பு அவன் காதுகளில் இடைவிடாமல் ஒலித்துக்கொண்டிருந்தது. ஆம்; ஒலித்துக்கொண்டிருந்தது. இன்றைக்குப் பதினென்கு வயதுகளைக் கடந்துவிட்ட அந்தச் சிரிப்பு, இளமை மாருமல் இன்னும் அவன் காதுகளில் ஒலித்துக்கொண்டிருக்கிறது.

★

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு கிராமத்தில் அவன் பிறந்தான். அப்படியும் இப்படியுமாக எட்டாவது வரை படித்தான். அதற்குமேல் படிக்கவுமில்லாமல் வேலை பார்க்கவுமில்லாமல் அந்தக் கிராமத்திலேயே இருந்தான். அந்தச் சிறிய வயதிலேயே ஒரு துறவியின் மனோநிலையை அவன் கொண்டிருந்தான். மாலையில் விளையாடும் நேரத்தைத் தவிர பாக்கி நேரங்களில், ஙிகழும் உலகின் தொடர்பற்றவனுக அவன் இருந்தான். கிராமத்திற்கு மேற்கிலிருந்த கண்மாய்க் கரையை ஒட்டிய ஒரு தென்னந்தோப்பில் அவன் அடிக்கடி போய் அமர்ந்திருப்பான். பழங்காலத்துக் கவிஞர்களைப் பற்றியெல்லாம் சிந்தித்துப் பார்ப்பான். சலசலக்கும் தென்னைஓலையும், 'விர்' ரென்று பறந்து செல்லும் வண்டுகளும் பல கவிதைகளில் வருவதை அவன் படித்திருக்கிருன். அவற்றையே தென்னந்தோப்பில் கண்ட அவன், அவற்றைப் பற்றித் தானும் பாட எண்ணினுன்.

கண்ணதாசன்

பாடியும் பார்த்தான். தனக்குத் தானே பேசிக்கொண்டான். அப்போதே ஒரு பெரிய எழுத்தாளனுகி விட்டதாக அவனே இறுமாந்துகொண்டான். தினசரி அவனைத் தென்னந்தோப்பில் சந்திக்கும் பலர், அவன் தன்னிடமிருப்பதாகக் கருதிய 'தெய்வீக' அம்சத்தை உணராமல், பையன் எதற்கோ தென்னந்தோப்பில் சுற்றுகிருன் என்று எண்ணினுர்கள்.

புதுவிதச் சிந்தனைகளின்மீது அவனுக்கு விடாப்பிடியான பற்று இருந்தது. தான் ஒரு பெரிய எழுத்தாளனுக ஆகிவிட்டதாகக் கற்பனை செய்து பார்ப்பதில் அவனுக்கு நிம்மதியும் தெம்பும் கிடைத்தன. கடையில் வேலை பார்க்கும் கணக்காயனுக்கும் கேலிப் பொருளாக இருந்த அவனை, கற்பனை ஒன்றுதான் உயர்ந்த இடத்தில் வைத்துத் திருப்திப்படுத்திற்று. கிராமத்திலுள்ளவர்களெல்லாம் தன்னை மிகவும் சாதாரணமாகக் கருதுவதைப் பற்றி அவன் மிகவும் வருந்தினுன். உலகம் தன்னை கவனிக்க வேண்டும். தான் சொல்வதைக் கேட்கவேண்டும் என்னும் ஆசை ஒன்றிருந்தாலும், கிராமத்தின் சிறு துரும்பு கூடத் தன்னை அறிந்துகொள்ளாததைப் பற்றி வருந்தினுன். அந்த மனிதர்களிடமிருந்து பிரிந்து, அவர்கள் நடமாட்டமே இல்லாத இடத்தில் அமர்ந்திருப்பதன்மூலம், ஒரு உயர்வு மனப்பான்மையை அவன் பெற்ருன்.

கூரை பிரிந்துபோன சாயாக்கடையும், கூடை கூடையாகக் காய்கறிகள் வந்து குவியும் சந்தைக்கடையும் பழக்கமான கண்மாய்க்கரையும் வரவர அவனுக்கு வெறுப்பை அளித்தன. அவன் சந்திக்க விரும்பிய இலட்சிய உலகத்திற்கும் அந்தக் கிராமத்திற்கும் துளிக்கூட சம்பந்தம் இல்லையே என்று அவன் எண்ணினுன். அந்தி படும்போது அமைதிமிக்க சூழ்நிலையில் காட்சியளிக்கும் அந்தக் கிராமத்தை விட்டுவிட்டு, ஒரு நாள் அவன் வெளியேறினுன்.

கையில் ஒரு சிறு பெட்டி. அதில் சாதாரணமான இரண்டு சட்டைகளும் வேட்டிகளும். சில பழைய புத்தகங்கள். கதை எழுதிய நோட் புத்தகங்கள். உடைந்துபோன ஒரு பவுண்டன் பேனு. இந்தக் கோலத்தோடு எங்கே போவது என்று திட்டமில்லாமல் வீட்டிலும் சொல்லிக்கொள்ளாமல் அவன் வெளியேறினுன். ஊருக்கு மேற்கே ஒரு மைல் தூரத்திலிருந்த,

— 9-ம் பக்கம் —

ரஷ்யா, ஏகாதிபத்திய நாடா, முற்போக்கு சக்தியா?

முற்போக்குச் சக்திதான்!

— பரிசுபெற்ற கட்டுரை: 2 —

ரஷ்யா 'ஏகாதிபத்திய நாடுதான்!' என வாதித்த கட்டுரையை சென்ற இதழில் பிரசுரித்திருந்தோம். பரிசளித்தோம். இங்கே 'ரஷ்யா, முற்போக்கு சக்திதான்!' என்று வாதிக்கிருர் இவர். இவருக்கும் ரூ. 12-8-0 பரிசளிக்கப்படுகிறது. அடுத்த இதழில் 'இல்லே, இல்லே! ஏகாதிபத்திய நாடுதான்!' என்கிருர் வேருெருவர்.

[ஆ-ர்.]

— எழுதியவர் —
சோ. இராசேந்திரன், பி.ஏ.
தென்மாப்பட்டு.

அழகான விளாங்கனி. பளபளப்பான தோடுடைய பக்குவமான கனி. உடைத்தால் உள்ளே மிகவும் காற்ருேட்டமான பிரதேசம். யானை உண்ட விளாங்கனி என்கின்றனர் இலக்கியம் பயின்ருேர். அத்தகைய கனியை ஒத்துள்ளது இக்கேள்வி. உலக வல்லரசுகளுள் முதன்மையான தகுதியைப் பெற்றுள்ள ரஷ்யா, ஏகாதிபத்ய நாடா அல்லது முற்போக்கு சக்தியா?

இன்றைய நிலையில், பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்திருப்பது ரஷ்யா பற்றிய பேச்சே. தொட்ட இடமெல்லாம் கண்ணில் தட்டுப்படுவது ரஷ்யா பற்றிய செய்தியே. எல்லா நாடுகளும் ரஷ்யாவை ஏன் கூர்மையாக நோக்குகின்றன என்ற கேள்விக்கு அடிப்படையில் ஒரே காரணம்தான் அழுத்தமாக அமைந்திருக்கிறது. பொங்கி எழும் பொருமை உணர்ச்சி, வேற்று நாட்டுக்காரர் கண்களில் பற்பல வர்ணங்களை பூசிவிடுகிறது. 'இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன் என்றெழுதிக் காட்டவொண்ணுத' இறைவனை, கவிஞர்களும், செந்நாப் புலவர்களும் எவ்விதம் பற்பல கோணங்களில் கண்டதாகப் பாடினர்களோ அவ்விதமே பல நாட்டு மக்களும் தலைவர்களும் ரஷ்யாவைப் பற்றி பற்பல கோணங்களில் மதிப்புரை வழங்குகின்றனர். சென்று திரும்பியவர்களோ, செவி இனிக்கு மட்டும் புகழ் பாடுகின்றனர். இதையெல்லாம் உற்று நோக்குவோருக்கு பிறர் கற்பனையால் காண்பதை அவர்கள் அங்கு செயலில் காட்டியுள்ளனர் என்று புலனுகின்றது.

புரட்சியும் மலர்ச்சியும்

இருபதாம் நூற்ருண்டில் எழில் மிகு நிலையில் காட்சிதரும் ருஷ்யா கடந்த நூற்ருண்டில் எந்நிலையில் இருந்தது? அந்நிலையில் மாற்றம் ஏன் ஏற்பட்டது? எவ்விதம் நிகழ்ந்தது? அதன் தரம், தகுதி முதலியவற்றைக் சிறிது ஆராய்ந்தால் இன்றைய நிலையின் உயர்வும், வளமும், உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

பத்தொன்பதாம் நூற்ருண்டில் ருஷ்யா ஜார் மன்னனின் கொடுங்கோலாட்சியை அனுபவித்தது. ரஸ்புடீன் சுற்றிவிட்ட பம்பரமாகச் சுழன்ருன் மன்னன். மக்களை மறந்தான். வேறு பல துறைகளில் இன்பங் கண்டான். தலைவனை இழந்த படை வீரர்களைப்போல் மக்கள் தத்தளித்தனர். எதிர்த்துக் குரலெழுப்புவோர் பிடித்துத் தள்ளப்பட்டனர் சைபீரியாவுக்கு. அத்தகைய இன்னலை அடைந்தவர்களுள் லெனினும், ஸ்டாலினும் உண்டு. கொதித்துக்கொண்டிருந்த மக்களின் உணர்ச்சியைக் கொழுந்துவிட்டெரியச் செய்த கொள்கை வீரர்கள் அவர்கள். 'விஞ்ஞான ரீதியில் சமத்துவம்' (Scientific Socialism) என்ற தத்துவத்தைப் போதித்த, கார்ல்மார்க்ஸின் 'மூலதனம்' என்ற நூல் அவர்களுக்கு கலங்கரை விளக்கமாக அமைந்தது. இத்தகைய அரசியல் பின்னணியுடன் பொருளாதாரம் அடைந்திருந்த இழிநிலையும் சேர்ந்து, ஒரு மகத்தான மாறுதலுக்குவித்திட்டது. விடுவிக்கப்பட்ட முன்னுள் அடிமைகள், சிறிய நிலப் பரப்பைப் பெற்றுக்கொண்டு அதற்குரிய குறிப்பிட்ட தொகையைக் கொடுத்தனர். 1906 ல் விவசாயிகளுக்கு நிலத்தை வாங்கவும் விற்கவும் உரிமை அளிக்கப்பட்டது. இதன் விளைவாக பெரும்பாலான நிலங்கள் விற்கப்பட்டன. நிலமற்றவர்களின் எண்ணிக்கை வளரலாயிற்று. அரசியலிலும், பொருளாதாரத்திலும் நிரந்தர மாறுதலை விரும்பியிருந்த அம்மக்கள், தங்களின் தலைவனுக லெனினை ஏற்றுக் கொண்டதில் வியப்பில்லை. 'போல்ஷ்விக்' கட்சி என்று அழைக்கப்பட்ட லெனின் கட்சி, மேற்கு ஐரோப்பாவில் நிலவிய 'சோஷலிஸ்ட்' கட்சிகளைப்போலல்லாது சில தீவிரக் கொள்கைககளைத் தாங்கியிருந்தது.

சைபீரியாவில் தள்ளப்பட்ட லெனின், ஸ்விட்ஜர்லாந்து வந்து ஒரு ஜெர்மானியனின் துணையால் 1917 ல் ரஷ்யா அடைந்தான். 'டூமா' (Duma) என்றழைக்கப்பட்ட மக்கள் மன்றத்தை ஜார்மன்னன் 1917 ல் கலைத்தான். இந்நிலையில் கிளர்ச்சி எழுந்தது. 1917 ல் ஏற்பட்ட புரட்சி 'போல்ஷ்விக்' கட்சியை, ருஷ்ய நாட்டில் பலமான கட்சியாக ஆக்கிவிட்டது. லெனினும் ஸ்டாலினும், தோளோடு தோள் நின்று, ஜார்மன்னனின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி இட்டனர். லெனின் 'பாட்டாளிகளின் சர்வாதிகாரத்தை' நாட்டில் ஏற்படுத்த விறைந்தார். கோவிலிலும், சீமான்களிடத்திலும் சிக்கிக்கிடந்த நிலங்களைப் பறித்து, ஏழைகளிடம் பகிர்ந்தளித்தார். தொழில்கள் நாட்டுடமை ஆக்கப்பட்டன. தொழிற்சாலைகள் தொழிலாளர்களின் பார்வையில் இயங்கின. உள்நாட்டுக் குழப்பங்களை நசுக்கினர். இத்தகைய 'கம்யூனசப் போராட்டம்' (War communism) முடிவுற்றவுடன் தனது கொள்கையில் மாற்றம் காண லெனின் விரும்பினுர். 1921ம் ஆண்டிற்குப்பின் லெனின் கண்ட கொள்கையை, 'புதிய பொருளாதாரக் கொள்கை' (New Economic Policy) எனக் கூறினர். அதன் வழி, விவசாயிகளின் உற்பத்தியை அரசாங்கம் எடுத்துக் கொள்வதற்குப் பதில், அவர்கள் வரிகட்டும் நிலை ஏற்பட்டது. தொழிற்சாலைகள் தொழிலாளர்களிடமிருந்து விடுவிக்கப்பட்டு, வேறு சில தனிப்பட்டவர்களின் கைக்கு மாற்றப்பட்டன.

ஸ்டாலின் கண்ட ருஷ்யா

லெனினுக்குப் பிறகு, டிராட்ஸ்கியின் எதிர்ப்பை சமாளித்து வெற்றி கண்ட ஸ்டாலின் கடைப்பிடித்த உள்நாட்டுக் கொள்கைகளும், வெளிநாட்டுக் கொள்கைளும் ருஷ்யாவை ஒரு நிரந்தரமான வல்லரசாக ஆக்கினது. லெனின் கண்ட புதுக் கொள்கையினுல் (N. E. P.) 'குலக்' (Kulak) என்ற விவசாய வர்க்கம், வரம்பு மீறி செழிப்புடன் வாழவழி செய்தது. ஸ்டாலின் அத்தகைய படாடோபமான இனத்தை நசுக்கிவிட்டார். அவர்களிடமிருந்து பலவந்தமாக பிடுங்கப்பட்ட நிலங்களை ஒன்று சேர்த்து, கூட்டுப்பண்ணை (Collective Farm) யை நிறுவினர். அரசாங்கத்தின் துணைகொண்டு, புதுமையான கருவிகளினுல், விவசாயிகள் பண்ணையில் உழுது பயிரிட்டனர். சாகுபடி அனைத்தையும் உழைப்பிற்குத் தக பிரித்துக்கொண்டனர். இத்தகைய முறைதான் இன்னும் ருஷ்யாவில் நீடித்து வருகிறது. கூட்டுப்பண்ணையின் ஒவ்வொரு உறுப்பினருக்கும் குடியிருக்க வீடும், கோழிப்பண்ணைக்காக சிறு நிலமும், வளர்க்க பசு ஒன்றும் அளிக்கப்பட்டுள்ளன.

1928க்குப் பிறகு ருஷ்யாவில் நாம் தொடர்ச்சியாக ஐந்தாண்டுத் திட்டங்களைக் காண்கிருேம். தொழிலாளர்களுக்கு நம் நாட்டைப் போலல்லாமல், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருள்களின் அளவைக் கொண்டு கூலி அளிக்கப்படுகிறது. தொழிற் சங்கங்களுக்கு அவ்வளவு முக்கியத்வம் தரப்படுவதில்லை. தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் உற்பத்தி அளவைக் குறித்த காலத்தில் நிறைவேற்றுகிருர்களா என்பதைக் கவனிப்பதே அச்சங்கங்களின் வேலை. அரசாங்கத்தின் கீழ் தொழிற்சாலைகள் அனைத்தும் இயங்குகின்றன. கூலியும் கால அளவும் அரசாங்கத்தாராலேயே நிர்ணயம் செய்யப்படுகின்றன.

அரசியல் அமைப்பு

ருஷ்யாவின் அரசியல் அமைப்பு முறையைச் சிறிது கவனிப்போம். ஏறத்தாழ 20 கோடி மக்களைக் கொண்ட ரஷ்யாவின் அரசியல் அமைப்பு ஸ்டாலினுல் 1936-ல் உருவாக்கப்பட்டது. சோவியத் சோஷலிச ஆட்சியின்கூட்டமைப்பு என ரஷ்யாவை அழைத்தனர். சோவியத் நாடு 16 மாகாணங்களை தன்னகத்தே தாங்கியுள்ளது. சோவியத்தின் உயர்ந்த அரசியல் அமைப்பின் (The Supreme Soviet) உறுப்பினர்கள் ஜனநாயக முறைப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிருர்கள். எல்லா அரசியல் அமைப்பும் கம்யூனிஸ்ட் கட்சி என்ற ஒரே கட்சியின் கொள்கைக்கும் திட்டங்களுக்கும் கீழ்ப்படிந்தே இயங்குகின்றன. கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றே சோவியத் நாட்டில் இயங்க இயலும். வேறு கட்சிகள் கிடையாது. ஏறத்தாழ 7 மில்லியன் மக்கள் கட்சியின் உறுப்பினர்களாக உள்ளனர். கம்யூனிஸ்ட் கட்சியின் நடு அமைப்பு 'போலிட் பீரோ' என அழைக்கப்படுகிறது. கட்சியின் பொதுச் செயலாளர் 'போலிட் பீரோ' உறுப்பினர்களின் துணையுடன், அரசாங்கத்தின் கொள்கைகளை வரையறுக்கிருர். இப்பொழுது இப்பதவியை வகிப்பவர் குருஷேவ். ஒரு முறை வகுக்கப்பட்ட திட்டங்கள் பிறகு அசைக்க முடியாத அளவுக்கு வலிவு பெற்றுவிடும்.

நிலையும் நினைப்பும்

சோவியத்நாட்டின் பொருளாதார நிலையையும், அரசியல் நிலையையும் ஒருவாறு கண்டறிந்த பின், அதன் தரத்தை உய்த்துணர வேண்டியது நமது கடமை. முதலில் ரஷ்யா ஏகாதிபத்திய நாடுதான், முற்போக்கு சக்தி அல்ல என்ற வாதத்திற்குக் காண்பிக்கப் பெறும் காரணங்களை ஆராய்வோம். முதலாவதாக ரஷ்யாவில் நடப்பது ஜனநாயகமல்ல, சர்வாதிகாரமே. ஸ்டாலின் நினைத்ததெல்லாம் சட்டமாக மாறியது. தனி மனிதனின் உரிமை ஜார் மன்னர் காலத்தில் மட்டுமல்லாது இப்பொழுதும் பறிக்கப்பட்டே உள்ளது. எந்த நிலையில் என்ன நடக்கும் என்பதே காணமுடியாத நிலையில் ரஷ்யாவின் போக்கு உள்ளது. பெரியாவின் திடீர் முடிவும், மாலன்கோவின் பதவி விலகலும் இதற்குத் தகுந்த சான்றுகளாகும். 'கம்யூனிஸ்ட் கட்சி தவிர

— 8-ம் பக்கம் —

'படைத்தளப் போட்டி'யைக் குறைத்த நாடு

★ பாமரர்க்கு நல்வழி வகுத்த நாடு! ★

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

எண்ணம்

~ கண்ணதாசன் ~

மலர் 4 ‖ 10–8–57 ‖ இதழ் 6

அடிமை விலங்கறுப்பீர்!

ஆடும் மயிலே! ஆடல் நிறுத்து!
அடிமை எனக்குன் ஆட்டமா தேவை?

பாடும் குயிலே! பாடா தொழிவாய்!
பாவியேன் செவிக்குன் பாடல்கள் அவலம்!

பேசும் கிளியே! பிழைமொழி ஒழிமின்!
பெற்றநாட் டரசிலான் பேச்சிலா மகிழ்வான்?

இன்னிசை வாண! இசைப்பொருள் முறிமின்!
என்னிரு செவியில் எனக்கிலை உரிமை!

கைகளில் விலங்கு! கால்களில் விலங்கு!
கண்களில் கருத்தில் எங்கணும் விலங்கு!

நெஞ்சினை முறித்தா வாய்க்கொரு உணவு?
நெற்றியைப் பிளந்தா சிகைக்குமை நீவல்!

கலைஏன் கவிஏன்? கானக் கருவிஏன்?
கண்படு தமிழ்ப்புவி காப்பதில் லாமல்!

தன்னர சடையாத் தறுதலை எனக்கு
இன்னருங் கலைகள் ஏன்?ஏன்? ஏன்?ஏன்?

வீடுவீ டேறி விதிர்ப்புறும் சோதரர்
வேதனை கண்டும் வாழ்கிறேன் இன்னும்!

பிச்சைப் பாத்திரம் பெருகிய தெங்கணும்!
பேடிமை தமிழரின் உடமை ஆயது!

மூடிய கதவின் உட்புறம் முழக்கம்!
மூளையும் வாயும் வேறுவே றுயின!

மனைவியைக் கூடவும் மத்திய அரசின்
அனுமதி வேண்டும்! அடிமையில் முழுமை!

மேடும் குளமும் கேரளர்க் காயின!
ஆடும் மாடும் அமைச்சர்க ளாயின!

'பாரத'க் காலில் சிரம்படச் சாய்ந்த
'பண்பி லாளர்' பெருகினர் எங்கணும்!

சட்ட மன்றிலும் சட்டி ஏந்துவன்
தமிழ னல்லால்இப் புவிதனில் யாருளர்!

நாடும் பிறர்பால்! நலமும் பிறர்பால்!
ஏடும் பிறர்பால்! இரப்போன் என்னவன்!

தில்லி நகரிலும் பாத்திரந் தூக்கித்
திரிவான் தமிழன்; இந்நாட் டுமன்னன்

ஈழ மண்ணிலும் "அம்மா! தாயே!"
எங்கள் குரல்!இதன் உரிமை எமக்கே!

சோறு போட முடியுமா உம்மால்?
சொல்லுக! தமிழன், அங்கே வருவான்!

எம்மை ஈன்றவள், அம்மியைக் குழவியை
ஈன்றிருந் தாலூர் அரைப்பதற் குதவும்!

தெருவெலாம் ஓலம்! திசையெலாம் ஏழமை!
சீரிலாத் தமிழர்க் குலகெலாம் தோழமை!

நாயினும் தமிழன் இழிந்தவன்! "அந்த
நாய்,மறு நாய்க்குப் பணிவ தின்மையால்"

ஏ ஓய் தமிழ! ஏ ஓய் தமிழ!
எழில்,கலை, காதல் ஒதுக்கி மூடிவை!

மொழிஎனும் வாளொடு மூட்டுக போரை!
அழிவதில் இப்பணிக் கழிவதே பெருமை!

வீடணக் குலத்தை வேரொடு சாய்ப்பாய்!
வேற்றவர் மார்பில் காலூன்றி நடப்பாய்!

குருதியில் குளிப்பாய்! கொற்றவர் ஆண்ட
திருவினை நாட்டை மீட்பதில் அழிவாய்!

தனிமையில் செல்லப் பணிப்பினும் முதலில்
சாகிறேன் நான்!பின் தைரியம் பெறுகநீ!

★

மாஸ்கோவில் தமிழ்ப் பண்டிதர்

பண்டித இராம. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, எம். ஏ., அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் பயின்றவர்; கரந்தைப் புலவர் கல்லூரி, மேலைச் சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரி ஆகிய இரண்டிலும் முதல்வராகத் திகழ்ந்தவர்; மதுரை அமெரிக்கன் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக இருந்தவர். அவர் சென்னை அரசினர் கலைக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளராக இருந்து, மூன்றாண்டு காலம் விடுமுறை பெற்று, ரஷ்ய அரசினர் அழைப்பின் பேரில் மாஸ்கோ சென்று தற்போது தமிழ்ப் பணி யாற்றி வருகிறார். அவர் தமது நண்பர் ஒருவர்க்கு எழுதியுள்ள கடிதத்தில் கீழ்க்கண்ட செய்தியைத் தெரிவித்துள்ளதோடு, ஒரு வேண்டுகோளையும் விடுத்துள்ளார்:

"ருதீன் என்பவர், லெனின்கிராட் பல்கலைக் கழகத்தில் தானே தமிழ் படித்துத் தமிழ்ப் பணி புரிந்து வருகிறார். அவர் தமிழை அழகாகவும், பிழையின்றியும் பேசுகிறார்; மொழியிலக்கணம் பயின்றுள்ளார்; தமிழிசைச் சிறக்க மதிக்கிறார்; பல மொழிகளில் வல்லவர்."

"1929-ஆம் ஆண்டிலேயே ரஷ்யாவில் ஒருவர் தமிழுக்கு இலக்கணம் இயற்றியிருக்கிறார்; 'மிகத் தலைமையான மொழி தமிழ்' என்று பல காரணங் காட்டி எழுதியுள்ளார்."

"கண்ணன். ஐங்குன்றர், பெருமான் என மூவர் தங்கள் பெயர்களைத் தமிழில் மாற்றி யமைத்துக் கொண்டுள்ளனர்."

வேண்டுகோள்

தமிழ்ச் சங்கம் — மாஸ்கோ

அன்பீர்,

இங்குப் பலர் ஆர்வத்துடன் தமிழ் பயில்கின்றனர். ஆனால், சுவடி யின்றி ஒரே பழஞ் சுவடியை நிழற் படம் எடுத்துப் படிக்கின்றனர். தமிழ்ச் சங்கம் நிறுவப் பெறுகிறது. ஒரு தமிழன் இங்கு வந்து செய்யும் முதல் முயற்சி. தமிழ் இங்கு வேரூன்ற வேண்டும்.

தமிழரும் தமிழன்பரும் சுவடிகள் **சில, பழையன** வேனும் பதிவுச் சுவடி அஞ்சலில் அடியிற் காணும் முகவரிக்கு விரைவில் அனுப்பியுதவ வேண்டுகிறேன். **விலை கொடுத்து வாங்கச் சட்டம் இடந்தரவில்லை.** அன்பு கூர்ந்து தமிழ்ப் பணிக்கு உதவ முந்துக.

விரைவில் தமிழ் வானொலி மாஸ்கோவிலிருந்து பரவும். வணக்கம்.

அன்புள்ள,

(கை-ம்) **பண்டித இரா. மீனாட்சிசுந்தரம் பிள்ளை,** எம்.ஏ.,
மாஸ்கோ.

முகவரி:

U. S. S. R., MOSCOW,
Zobouvsky Boulevard 21,
Pandit. P. R. M. Pillai, M.A.

இந்தச் செய்தி தோழர் நா. அறிவழகன் அவர்களால் 'தென்றலு'க்கென அனுப்பி வைக்கப்பட்டதாகும்.

★ கண்ணதாசன் ★

4

விசில் சப்தத்தைக் கேட்டுக் குடிசைகளில் பரபரப்பு ஏற்பட்டது. பானைகள் உடையும் சப்தம் கேட்டது. போலீசார் வண்டியை விட்டு இறங்கி வேகமாக வந்துகொண்டிருந்தார்கள்.

உள்ளே அஞ்சலையை நெருங்க முயற்சித்துக் கொண்டிருந்தான் அந்த நடுத்தர வயது மைனர். பளிச்சென்று அஞ்சலை கூரையிலேயிருந்த அரிவாளை எடுத்துக்கொண்டாள். காமுகன் பின் வாங்கினான். 'என்ன நெனைச்சிக்கிட்டுருக்கே!' என்று உறுமினாள். 'மூடு வாயை! மானங்கெட்ட நாயி. இப்படி ஒவ்வொரு ராத்திரியும் பொம்பளை தேடி அலையறதுதான் ஒங்க பட்டணத்து வேலைபோ! சத்தம் போட்டா வெட்டிப் போட்டுடுவேன். நான் கிராமத்து மாடு. என்னைத் தெரியாது உனக்கு!' என்று கண்களில் கனல் பறக்கப் பேசினாள் அஞ்சலை. அப்போது அவள் தோற்றத்தைப் பார்த்த காமுகன் உண்மையிலேயே பயந்துவிட்டான். இந்த நேரத்தில் 'படபட' வெனக் கதவு தட்டப்பட்டது. பளிச்சென ஓடிக் கதவைத் திறந்தாள் அஞ்சலை. வெளியிலே ஓடிவிடலாம் என்றுதான் திறந்தாள். ஓடவும் முயன்றாள். பளிச்சென அவள் கையைப் பிடித்துக்கொண்டான் ஒரு போலீஸ்காரன். 'நில்லு' என அதட்டினான். வந்திருப்பது போலீஸ் எனத் தெரிந்துகொண்ட அஞ்சலை, கொஞ்சம் தைரியமாக நின்றாள். எல்லாக் குடிசைகளும் சோதிக்கப்பட்டு, ஏராளமான ஊறலும் கள்ளச்சாராயமும் கைப்பற்றப்பட்டன. சிலர் கைது செய்யப்பட்டார்கள். சிலர் ஓடிவிட்டார்கள். அஞ்சலையை நாடிவந்த காமுகனும் கைது செய்யப்பட்டான். எல்லோரும் போலீஸ் வண்டியில் ஏற்றப்பட்டார்கள். கைது செய்யப்பட்டவர்களில் இருபது பேர் வரை பெண்கள் இருந்தார்கள். இருட்டாக இருந்ததால் அஞ்சலையை வடிவேலு கண்டுகொள்ள முடியவில்லை. வடிவேலு வேறு வண்டியில் ஏறிக்கொண்டிருந்தான். எல்லோரும் நேரே பூக்கடை போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு செல்லப்பட்டார்கள். வண்டியைவிட்டு இறங்கும போதுதான் தான் கொண்டு வரப்பட்டிருப்பது போலீஸ் ஸ்டேஷனுக்கு என்பதை அஞ்சலை அறிந்தாள். அவள் கண்கள் கலங்கின. ஒவ்வொருவராக ஸ்டேஷனுக்குள் அனுப்பப்பட்டார்கள். அனுப்பிக் கொண்டிருந்த வடிவேலு திடீரென்று அஞ்சலையைப் பார்த்தான். அவன் தலை சுற்றிற்று. மூளை குழம்பிற்று. 'அஞ்சலையா? விபச்சாரக் கும்பலிலா? கள்ளச் சாராயக் கூட்டத்திலா?...' அவனது மான உணர்ச்சி உடம்பை ஒருமுறை வாட்டி எடுத்தது. அவனைப் பார்த்த அஞ்சலை 'மச்சான்' என்றாள். வடிவேலுவின் உடம்பில் மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றன.

அவன் பதில் பேசவில்லை. பரிதாபமாக அவனைப் பார்த்தாள். 'உள்ளே போ!' என்று ஒரு போலீஸ்காரன் சொன்னதைக் கூடக் கவனிக்காமல் அப்படியே அசையாமல் நின்றாள். கலங்கிய அவளது கண்கள் பரிதாபமாகத் தன்னைப் பார்ப்பதை வடிவேலு கண்டான். அதற்குள் ஒரு போலீஸ்காரன் அஞ்சலையின் கழுத்தைப் பிடித்து உள்ளே தள்ளினான். வடிவேலு அங்கேயே செத்துவிடுபவன்போல் இருந்தான். அவனும் அஞ்சலையும் நின்ற நிலையைக் கவனித்த சில போலீஸ்காரர்கள், இப்போது அவனையே கவனித்தார்கள். புத்தூர் ரோட்டு சம்பவத்தை நேரில் கண்டிருந்த சிலர் நிலைமையைப் புரிந்துகொண்டார்கள். கொதித்த மேனியோடு நின்ற வடிவேலு, சிறிது சிறிதாகத் தெளிந்தான். அஞ்சலை சந்தேகத்துக்குரிய பெண்ணல்ல - அவன் அவளை மனதார நம்பினான். ஆனாலும் ஒரு சிறு சந்தேகம் இடையிடையே அவன் மனதை அரித்தது. பலகாலம் தன்னை விட்டுப் பிரிந்திருந்த அஞ்சலை, இயற்கை உணர்ச்சிகளால் வழி மாறியிருப்பாளோ? சீச்சீ...... அஞ்சலையா! கடிதம் வரா விட்டால் கலங்கித் துடிக்கும் அஞ்சலையா! இருக்காது, இருக்காது! பின் ஏன் இங்கு வந்தாள்? எப்படி வந்தாள்?— அவன் தன்னைத்தானே கேட்டுக் கொண்டான். நிகழ்ச்சிகளை முழுதும் அறியாத மனது; தானே அதற்கொரு முடிவைத் தேடிக் கொள்வது இயலாது. அஞ்சலையிடம் கேட்டால்தான் தெரியும். அவளோடு பேசலாமா? விபச்சாரக் குற்றம் சாட்டப்படுவதற்காகக் கைது செய்யப்பட்டிருக்கும் அவளோடா? மற்றைய போலீஸ்காரர்களுக்கு மதிப்பிலா? அவர்கள் என்ன நினைப்பார்கள்! அவளை மனைவி என்று சொல்லிக்கொள்ளவே அவன் மனம் நடுங்கிற்று. உண்மையை அறியாமல் அவளை எப்படி இகழ்வது! வடிவேலு அவளோடு பேசிவிடத் துணிந்தான். உள்ளே எல்லாப் பெண்களுடைய பெயர்களையும் விசாரித்து எழுதும் கட்டம் நடந்து கொண்டிருந்தது. ஒவ்வொருவரும் தங்கள் பெயரைச் சொல்லி வந்தார்கள். அவர்களில் யாருக்கும் கல்யாணம் ஆகவில்லை என்பதையும் கூறிவிட்டார்கள். ஆனால் அஞ்சலை, தனக்குக் கல்யாணம் ஆகிவிட்டது என்று கூறியதோடு, தன் கணவன் அங்கேயே வந்திருப்பதாகவும் கூறினாள். வடிவேலுவின் இதயம் வெடித்துவிடும் போலிருந்தது. குறைந்த சம்பளத்தில், கொடுமையான உணவில், தாளாத தனிமையில் அவதிப்படும் அவனால் இந்தப் பேரிடியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மெதுவாக அங்கிருந்து நழுவி, போலீஸ் வண்டிக்குப் பின்னால் போய் நின்றான். இரண்டு நிமிடத்திற்கெல்லாம் 'வடிவேலு, வடிவேலு!' என்று அழைத்தார் மேலதிகாரி. அவன் நடைப்பிணம் போல ஸ்டேஷனுக்குள் நுழைந்தான். நுழைந்ததும் நுழையாததுமாக லோக்கல் போலீஸ் இன்ஸ்பெக்டர், அஞ்சலையைக் காட்டி 'இவள் உன் மனைவியா?' என்றார். 'ஆமாம்...' என்பதற்கு அறிகுறியாக அசைந்த வடிவேலுவின் தலை, தானாகக் குனிந்தது. இன்ஸ்பெக்டரே அதிர்ச்சி அடைந்தார். அஞ்சலையையும் வடிவேலுவையும் மாறி மாறிப் பார்த்தார். அவருக்கும் பழுதுபடாத இருதயம் இருந்தது. ஏதோ சந்தர்ப்பக் கோளாறு நடந்திருக்க முடியும் என யூகிக்க அவரால் முடிந்தது. சில வினாடி மௌனத்திற்குப் பிறகு, 'சரி போ! கூப்பிடுகிறேன்!' என அவனை அனுப்பினார் இன்ஸ்பெக்டர். பிறகு அஞ்சலையைத் தவிர அத்தனை பேரையும் 'லாக்கப்'பில் போட உத்தரவிட்டார். ஆண்களும் பெண்களும் அதிகமாக இருந்ததால் சப்-ஜெயிலுக்கு அனுப்பி விடலாம் என்று முடிவு செய்து, உத்தரவுக்கு மறு உத்தரவு போட்டு, அந்த இரவு நேரத்தில் அவர்களை சப்-ஜெயிலுக்கு அனுப்பினார். வடிவேலுவை அழைத்தார். அவன் முன்னிலையில் அஞ்சலையை விசாரித்தார். தாளாமல் அழுதபடி அஞ்சலை நடந்ததைச் சொன்னாள். பையனின் கால் முறிந்த செய்தியைச் சொன்னபோது வடிவேலு தேம்பித் தேம்பி அழுதான். அதைத் தொடர்ந்து அவள் சொன்ன அனைத்தையும் அவன் நம்பினான். நல்ல மனம் படைத்த இன்ஸ்பெக்டரும் நம்பினார். அவளை வழக்கிலிருந்து விடுதலை செய்து விடுவதற்கு முயற்சிப்பதாக வடிவேலுவிடம் கூறினார். அப்பொழுதே அவளை ஜாமீனில் விடுவித்தார். சிறைச்சாலைக்குக் கொண்டுபோய் விடுவார்களோ என்று தேம்பி நின்று திணறிய அஞ்சலை, தெளிந்தாள். ஒரு கவலைக்குமேல் மறுகவலை வந்தால் முதற்கவலை சுகமாக மாறி விடும்! கைது செய்யப்பட்ட கவலை, ஜாமீன் விடுதலையைக் கேட்டதும் பறந்துபோய் விட்டது அஞ்சலைக்கு. இன்ஸ்பெக்டரைக் கும்பிட்டு விட்டு மௌனமாக வடிவேலுவைப் பின்தொடர்ந்தாள். கொஞ்சம் கடுகடுப்பான எஸ். ஏ. பி. மேலதிகாரிகூட, அவனோடு அஞ்சலையை வண்டியில் ஏற்றிக் கொள்ளச் சம்மதித்தார். வண்டியில் இருவரும் மௌனமாகவே வந்தார்கள். அவர்களைக் 'காம்ப்' பிற்கு வெளியிலேயே இறக்கி விட்டு விட்டு, உள்ளே போய் ஆடைகளை மாற்றிக்கொண்டு வருவதற்காகப் போனான் வடிவேலு. அவன் கொஞ்சம் மகிழ்ச்சியாகவே இருந்தான். அஞ்சலையைத் தன் அருகிலேயே வைத்துக்கொள்ள வேண்டும் போலிருந்தது அவனுக்கு. அவனுடைய நண்பர்கள் சிலர் அவனை விசாரித்தார்கள். 'வந்து சொல்கிறேன்.' என்று சொல்லி விட்டு உற்சாகமாக 'காம்ப்'பை விட்டு வெளிவந்தான் வடிவேலு. சுற்றுமுற்றும் பார்த்தான். 'அஞ்சலை! அஞ்சலை!' என்று குரல் கொடுத்தான். அவன் மனம் படபடத்தது.

(தொடரும்)

வெண்பாப் போட்டி

2

ஈற்றடி :

பூச்சூடிப் போவாள் புறம்.

முடிவு தேதி 24-8-57

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6.

முதல் போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட வெண்பாக்கள் அடுத்த இதழிலிருந்து பிரசுரமாகும்.

ஐயா, வானொலியாரே!

நிலயத்தை மூடிவிட்டு அரிசிக்கடை வைக்கலாம்!

அரசியல் பத்திரிகையாளர்கள் வெளியிடும் பொங்கல் மலரைப்போல், தீபாவளி இதழைப்போல் சென்ற ஜுலை 15ம் தேதியன்று எல்லாக் கடைகளிலும் ஒரு அழகான புத்தகம் தொங்கிக்கொண்டிருந்தது. பல வண்ணங்களில் முகப்புச்சித்திரத்தைத் தயாரித்து முப்பதாவதாண்டு விழா இதழாக வானொலியை அவ்வாறு வெளியிட்டிருந்தார்கள். ஓரிடத்தில்வீணையும், இன்னொரு இடத்தில் பரத நாட்டியமும், பிரிதோரிடத்தில் புல்லாங்குழலும், வேறொரு இடத்தில் நாதசுரமும், மையத்தில் மேடைப் பேச்சுமாக முகப்பில் சித்திரங்கள் தீட்டப்பட்டிருந்தன. இதழ், பார்ப்பதற்கு மிக அழகாக இருந்தது. கண்ணைக்கவர்ந்து,கருத்தை ஈர்ந்து பொன்னைப்போல் பாதுகாக்க வேண்டிய இலக்கியத் தெளிவுரை நூலைப்போல் அந்த வானொலி இதழ் அமைந்திருந்தது. இதழின் வெளித்தோற்றம்தான் வனப்பாக இருந்தது, வசிகரித்தது என்று எண்ணிடக்கூடாது. உள்ளேயும் சிறப்புக்குக் குறைவில்லை **தமிழ்த் தென்றல் திரு. வி. க., நிதித்துறை வல்லவர் ஆர். கே. எஸ், ஜி. ஏ. நடேசன், நாதசுரமன்னன் டி. என். ராஜரத்தினம், வ. ரா. எஸ். சத்யமூர்த்தி, ஆச்சாரியார், பம்மல் சம்பந்த முதலியார்** ஆகியோரின் உருப்படங்கள் இதழின் உட்பகுதியை சிறப்பித்திருக்கின்றன. ஆனால் இன்றைய சென்னை, திருச்சி வானொலி நிலயங்கள் செயலாற்றும் நிலையில், மேலே குறிப்பிடப்பட்ட தமிழறிஞர்களின் படங்களையும், தமிழ் காலாச்சாரத்தை நினைவூட்டும் முகப்புச் சித்திரத்தையும் அச்சிட்டு வெளியிடுவதற்கு தமிழ்நாட்டு வானொலி நிலயங்களுக்கு அருகதை உண்டா என்பதே சிக்கலுக்குரியதாகும். தமிழகத்து வானொலி நிலயங்கள், தமிழுக்காக - தமிழ் வளர்ச்சிக்காக—இல்லாவிட்டாலும் இருக்கும் தமிழ் சாகாதிருப்பதற்காக என்ன செய்திருக்கின்றன என்று கழகச் சார்புடையோர் மட்டுமல்ல - அரசியல் என்றால் ஆபத்தானது என்று ஒதுங்கும் கருமமே கண்ணுயினர்கூட அதட்டிக் கேட்டு வருவதை தமிழகம் நன்கறியும். தமிழறிஞர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள்கூட பல இடங்களில் கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் வானொலி நிலயங்களில் பணிபுரியும் 'பெரும்புலவர்'கள் தமிழ்ப் பெருமக்களின் ஒருமித்த கருத்தை - வானொலி நிலயங்கள் தமிழுக்குத் துரோகம் புரிகின்றன என்ற கருத்தை — அடியோடு மறுத்துரைக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். ஊதியம் தரும் எசமானர்களுக்கு நன்றி விசுவாசத்துடன் அவர்கள் நடந்துகொள்கிறார்கள் என்று நாம் இடித்துரைக்கவில்லை. தமிழகத்து வானொலி நிலயங்களில் பணிபுரியும் தமிழ் கற்றோர்-புலமை பெற்றோர்-காட்டும் காரணங்கள் ஏற்றுக் கொள்ளத் தக்கவை தானா என்பதை தமிழ் மனம்படைத்த அவர்களே ஒருகணம் ஆய்ந்து பார்க்கட்டும். தமிழிலே நல்ல தேர்ச்சியும் புலமையும் பெற்ற அ. ச. ஞானசம்பந்தன் அவர்கள், தமிழ் நாடகத் தயாரிப்பாளராகவும், தமிழார்வம் கொண்ட **மீ. ப. சோமசுந்தரம்** அவர்கள் சொற்பொழிவுத்துறை அமைப்பாளராகவும் சென்னை வானொலி நிலயத்தில் பணிபுரிகின்றனர். இந்த இருவருமே கூறுகிறார்கள்,தமிழகத்து வானொலி நிலயங்கள் தமிழுக்குப் பெருந்தொண்டு புரிகின்றன என்று! அவர்களின் கூற்றை தமிழகம் ஏற்றுக்கொள்ளாததோடு, அவர்கள் மனச்சான்றுக்கு விரோதமாக கருத்தைத் தெரிவித்திருப்பதாக அவர்கள்மீது பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறது என்பதை இந்தத் தருணத்தில் அவர்களுக்கு நினைவுறுத்த விரும்புகிறோம். மேலும் 'வானொலி' முப்பதாவதாண்டு விழா இதழில் திருவாளர் மீ. ப. சோமசுந்தரம் அவர்கள்,தமிழகத்து வானொலி நிலயங்கள் தமிழுக்குத் தொண்டு ஆற்றியிருப்பதாக கட்டுரை வேறு தீட்டியிருப்பது விந்தைக்குரியதாகும். அதற்கு அவர் கூறியிருக்கும் சான்றுகளைப் பார்த்தால், தமிழைப் பற்றி கட்டுரையாளர் என்ன கருத்துக் கொண்டிருக்கிறார் என்பதே விடுகதையாகத் தென்படுகிறது. **வானொலி, ஒலிமலர், முன்னேற்டம், உரைக்கோவை, காட்சி** வரிசை, போன்ற வார்த்தைகளை பரப்பிய பெருமை வானொலி நிலயத்தையே சாருமென்கிறார் சோமு. வெட்கக்கேடு! வானொலியைப் புரட்டினால் கருத்துக்குப் புலப்படாத, வாயால்கூட உச்சரித்துப் பார்க்கமுடியாத மொழியில்நிகழ்ச்சிகள் பிரசுரிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் தோழர் சோமசுந்தரம் அலைமோதும் கடலில் காகிதக் கப்பலை மிதக்கவிட்டுப் பார்க்கிறார். தமிழ்தொண்டு புரிகிறாராம் தமிழ்த் தொண்டு! சென்னை ஒன்றில் காலை 6-50 க்கு **ஸ்வாகதம்** என்று போடப்பட்டு வருகிறது. ஸ்வாகதம் என்றால் என்ன என்றே புரியவில்லை. காலை இசையாக இருக்குமென்று நாமே தீர்மானித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. அது எந்த இசையானாலும் அந்த 'ஸ்வாகத'த்தை தமிழில் பிரசுரித்தால் யாருடைய முதல் கெட்டுவிடப் போகிறது! ஸ்வாகதமாம்! இந்த ஸ்வாகதத்தைப் பிரசுரிக்கவா தமிழ் படித்தவர்களுக்கு நூற்றுக்கணக்கில் சம்பளம் கொடுத்து வைத்திருப்பது?

அது மட்டுமல்ல! வானொலி இதழைப் புரட்டினால் பெரும்பாலான நிகழ்ச்சிகளுக்குத் தலைப்பே பிறமொழிகளில்தான் இருக்கிறது. அந்தத் தலைப்புகளுக்கு தமிழில் சொல் இல்லாமற் போய் விடவில்லை. நடைவண்டி யோட்டும் குழந்தைக்குக்கூடத் தெரியும்! தமிழ்ப் புலவர்கள்-பட்டம் பெற்றவர்கள்-புழுக்காகக் காத்துக்கிடப்பவர்கள் — அவர்களுக்குத் தெரியவில்லை என்று நாம் சொல்லமாட்டோம். துரோகம் செய்கிறார்கள் தாய்மொழிக்கு என்பதைத் தவிர வேறு அல்ல என்றுதான் நாம் கருதுகிறோம். இதோ வானொலியில் பிரசுரமாயிவரும் தலைப்புகள் :-

ஸ்வாகதம்
கீதமஞ்சரி
கீதமாலிகா
பிராந்தியச் செய்திகள்
சுகம்சங்கீத்
பக்திகீதம்
சித்ரகானம்
வாத்ய இசை
சங்கீத உபன்யாசம்
கானலஹரி
அகில பாரத சங்கீத நிகழ்ச்சி
யாத்திரீகர்
கதா காலக்ஷேபம்
கோஷ்டி கானம்
ஹிந்துஸ்தானி சங்கீதம்
லயச்சித்திரம்
சங்கீத சஞ்சிகை
வாத்ய வித்வான்கள்
ஜந்த்ரஸம்மேளனம்
மதராஸ்

இந்தத் தலைப்புகளெல்லாம் எப்போதாவது ஒரு இதழில் பிரசுரிக்கப்படும் தலைப்புகளல்ல; நிரந்தரமாகவே ஒவ்வொரு இதழிலும் பிரசுரிக்கப்படுகின்றன. இதுதான் தமிழ்த்தொண்டா என்று கேட்டால், "ஆகா ஊ ஹு" என்கிறார்கள் அங்கிருக்கிற புலவர்கள்.

தலைப்புகள் அப்படியென்றால் அந்தச் சொற்களை உச்சரிப்பவர்களாவது முறையாக உச்சரிக்க வேண்டாமா! '**சங்கீதம்**' என்பதை '**சங்கி(த்)தம்**' என்று உச்சரிக்கிறார்கள். இதைப் போலவே வடமொழிச் சொற்கள் அனைத்தும் இடையிலே த்-ச் சேர்த்தே உச்சரிக்கப்படுகின்றன. அந்த ஓசை, எருமைக் கொம்பில் இரும்பைத் தேய்ப்பதுபோல் நமக்குக் கேட்கிறது. இந்த ஓசைச் சொற்களைத்தான் தமிழர்கள் கேட்டுக்கொண்டிருக்க வேண்டுமா? இனிமை வேண்டாம்; கொடுமையாவது இல்லாதிருக்க வேண்டாமா? துணைக்கண்டத்தின் மற்ற வானொலி நிலயங்களில், இருக்கிற வேறொரு மொழி நிகழ்ச்சிகளை நீக்கிவிட்டு, தங்கள் தாய் மொழி நிகழ்ச்சிகளையே இணைத்துக்கொள்கிறார்கள்; அவர்கள் தாய் நாட்டின்பால், மொழியின்பால் நீங்காப்பாற்றுக் கொண்டவர்கள். இங்கே இருக்கிற நிலய நிகழ்ச்சி அமைப்பாளர்கள், தப்பித்தவறி இருக்கிற தமிழ் நிகழ்ச்சிகளையும் ரத்து செய்துவிடுகிறார்கள். இவர்களுக்குப் பெயர் '*தமிழபிமானிகள்.*' துணைக்கண்டம் மொழிவாரியாகப் பிரிக்கப்பட்ட பின்னும், தென்னாட்டைப் பொருத்த வரையில்-அதுவும் வானொலி நிலயங்களைப் பொருத்த வரையில் இன்னும் தெலுங்கு நிகழ்ச்சிகள் - கன்னட நிகழ்ச்சிகள் நீக்கப்படவில்லை என்பதை தமிழ் வானொலி நிலய நிர்வாகிகளின் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம்.

'வானொலி' என்ற சொல்லைக் கொண்டுவந்ததே, ரோடியோ நிலயம்தான் என்கிறார்கள். இப்போது எங்கே அந்தத் தமிழ்ச்சொல்! **ஆகாசவாணி** என்றல்லவா தொண்டையைப் பிடித்துக் கொண்டு சொல்கிறார்கள். **நமஸ்காரம்** என்ற சொல், **ஜெய்ஹிந்த்** என்ற இடைக்கால செயற்கை கோஷம் இன்னும் மறையவில்லை. தமிழுக்கு ரேடியோ அபரிமிதமான தொண்டு செய்திருக்கிறதாம்! கதை அளக்கிறார்கள்.

தமிழுக்காக நிகழ்ச்சி ஒதுக்க நேரமில்லாமலில்லை. இருக்கிறது. ஏராளமாக இருக்கிறது. விருப்பமில்லை அவர்களுக்கு! அவ்வளவுதான்! ஒவ்வொரு நாள் மாலையிலும் 5.30 மணிக்கு ஐரோப்பிய சங்கிதம் அவசியம்தானா? இதைப் பற்றி நிலய நிர்வாகிகள் கவனம் எடுத்துக்கொண்டால் - அதைப் போல் பல வேண்டாத நிகழ்ச்சிகள் நிறைய அகப்படும். அக்கறையோ தமிழ்ப்பற்றோ இருந்தால் தானே! அது தானே இங்கே 'பூஜ்யம்'!

இந்த நிலைதான் நீடிக்குமென்றால் முப்பதாண்டு நிறைவோடு தமிழ் நாட்டு வானொலி நிலயங்களை மூடுவதே நல்லது என தமிழ்மக்கள் தீர்மானித்துவிடுவர்! இருக்கும் தமிழாவது அழியாதல்லவா! தமிழ் நாடகத்திற்கு அமைப்பாளராக இருக்கும் திருவாளர் அ. ச. ஞான சம்பந்தம் அவர்களே, தமிழைத் தற்கொலை செய்யத் தூண்டிவிட்டு, அவர் எழுதிய நாடகத்திற்கு '**சாப விமோசனம்**' என்று பெயர்கொடுத்தால் தமிழ் எங்கே உருப்படப் போகிறது! தமிழை அழிக்கும் 'திருப்'பணியில் முனைந்திருப்போர் வேண்டுமானால் வாழ்க்கையை உயர்த்திக்கொண்டு போகலாம்! அந்த உயர்வு எத்தனை நாளைக்கு?

★ தென்னரசு ★

கேள்விப்பெட்டி

பன்மொழிப்புலவர் கா. அப்பாதுரையார், எம். ஏ., எல். டி,

பதில் தருகிறார்

வி. எஸ். முருகவேள், பழனி.

ஆதி பகவன் என்றும், தாமரைக்கண்ணன் என்றும், வாலறிவன் என்றும் பல்வேறு கடவுட் குறிப்புகளும் பல்வேறு மதத்தின் கருத்துக்களும் திருக்குறளில் காணப்படுவது! ஏன்? எல்லா மதங்களையும் சமநிலைப்படுத்த வள்ளுவர் இவ்வாறு செய்தாரா?

பல்வேறு சமயங்களின் மூலக் கருத்துக்களும், பல்வேறு சமயங்களின் மரபுச் சொற்றொடர்களும் திருக்குறளில் காணப்படுவது உண்மையே. ஆனால் எந்த சமயத்தின் கருத்துக்களுக்கும் மரபுகளுக்கும் முரண்பாடான எவையும் திருக்குறளில் இல்லை. இதுவே திருக்குறளின் பொதுமை. இதை சமநிலை அல்லது சமரசப் பண்பு என்றுதான் இன்று பெரும்பாலோர் கொள்ளுகின்றனர். ஆனால் திருக்குறளுக்குப் பிற்பட்ட சமயங்கள், தமிழகத்துக்கு நெடுந்தொலைவில் தோற்றிய சமயங்கள் ஆகியவற்றின் வகையில்கூட திருக்குறள் வியக்கத்தக்க முறையில் பொதுமையுடையதாயிருக்கிறது. இது சமநிலையோ சமரசமோ மட்டும் குறிக்கமுடியாது. காலங்கடந்த இந்தப் பொதுமையை வள்ளுவரின் தொலைநோக்குக்கு, அல்லது அவர் தெய்வத்தன்மைக்கு அறிகுறி என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

சமயங்கள் ஏற்பட்டபின் அவற்றிடையே சமரசம் காணும் முயற்சி என்று திருக்குறளைக் குறிப்பதைவிட, சமயங்கள் தொடங்குவதற்கு முன், அவற்றின் வேறுபாடுகள் கிளைப்பதற்குமுன் நிலவிய மூலப் பொதுமை என்று குறிப்பது பொருத்தமென்று நான் கருதுகிறேன். திருக்குறள் சங்ககாலத்தது என்று கருதப்பட்டு வருவதனாலேயே பலர் இம்முடிவுக்கு வரவில்லை; ஆனால் உண்மையில் அது புத்த, சமண, சமயங்களுக்கும், ஆரிய வேதங்களுக்கும் முற்பட்ட ஒரு முதல் நூல் ஆனதனாலேயே, இந்த சமரசப் பண்பு அதற்கு அமைந்துள்ளது என்று கருத இடமுண்டு. தமிழக அறிஞர் இதை மேலும் ஆராய்தல்வேண்டும்.

❁

பி. ராமமூர்த்தி, மதுரை.

ஆரியர்கள் வடநாட்டிற்குள் நுழைந்து எவ்வளவு காலத்திற்குப் பின் தென்னாட்டிற்குள் நுழைந்தார்கள்? எந்த நூற்றாண்டு என்று குறிப்பிட முடியுமானால் நலம்.

ஆரியர்கள் சிந்து, கங்கைவெளிக்குள் கி.மு. 1500 ல் நுழைந்தார்கள் என்றே பெரும்பாலான ஆராய்ச்சி அறிஞர்கள் கருதுகிறார்கள். நுழைந்த காலம் இன்னும் பழைமையானது என்று கருதியவர் உண்டு. அத்துடன் கி.மு. 2500 க்கு முன் ஆயிரக்கணக்கான ஆண்டு நிலவிய சிந்து வெளி நாகரிகமே வேதகால ஆரிய நாகரிகந்தான் என்று வாதிக்க முன்வருபவரும் உண்டு. ஆனால் அணிமையில் ரூபர் நகரின் அருகில் அகழ்ந்து காணப்பட்ட புதைபொருள் ஆராய்ச்சி மூலம் சிந்து வெளி நாகரிகம் ஆரியர் வருவதற்கு முற்பட்ட நாகரிகமென்றும், ஆரியர் வருகை கி. மு. 1500 க்கு உரியதே என்றும் கிட்டத்தட்ட முடிவுபடுத்தத் தக்கதாயுள்ளது.

தென்னாட்டிற்கு ஆரியர்கள் படையெடுப்பு நேரடியாக என்றும் வந்து எட்டியதாகத் தெரியவில்லை. வடதிசையில் திராவிட நாகரிகங்களுடன் ஆரிய நாகரிகம் பல படியாகக் கலந்து ஒரு புதிய ஆரிய நாகரிகமும், ஆரிய இலக்கிய மொழியும் ஏற்பட்ட காலம் கி. மு. 7 முதல் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு வரை ஆகும். தமிழகத்திற்கு வந்த ஆரியர்கள் படை எடுப்பாளர்களோ போர் வீரர்களோ அல்ல. முதலில் புத்த, சமண சமயங்களைப் பரப்புவதற்காகச் சில ஆரியர்கள் தென்திசையில் வந்தனர். அவர்களோடு போட்டியிட்டு வடக்கே புத்த, சமண சமயங்களின் ஆதிக்கத்திலிருந்து தப்பி ஓடிவந்த ஆரிய வைதீகப் பார்ப்பனர்களைத் தமிழக அரசர்கள், ஆதரவு தந்து தனி குடியிருப்புக்கள் அளித்தனர். அவர்களுக்குத் தனி உரிமைகளும் பாதுகாப்புக்களும் வழங்கப்பட்டன. தொடக்கத்தில் ஊருக்கு வெளியே அமைந்த இந்தக் குடியிருப்புக்கள் 'பார்ப்பனச்சேரிகள்' என்று அழைக்கப்பட்டன. நாட் செல்லச் செல்ல தமிழக அரசர்கள், அவர்களைத் தாமாக வடக்கிருந்து வரவழைத்து ஆதரவு தந்தனர். ஊருக்கும் புறம்பே இருந்த சேரியும், ஊருடன் சேர்ந்ததாகக் கருதப்பட்டு, சேரிகள் 'அக்கிரகாரங்கள்' என்று அழைக்கப்பட்டன.

ஆரியப்படை எடுப்புக்களோ வைதீகரல்லாத மக்களோ தமிழகத்தில் குடியேறாத காரணத்தால்தான் ஆரியப் புரோகிதர்களாகிய பார்ப்பனர்களல்லாத அரசரோ, வணிகரோ ஆரிய வருண முறைப்படி தென்னாட்டில் கிடையாது.

ஆரியர் இவ்வாறு தென்னாட்டில் சிறுகச் சிறுகப் புகத் தொடங்கிய காலம் கடைச்சங்கத்தின் தொடக்க காலம், ஏறத்தாள கி. மு. மூன்றாம் நூற்றாண்டு ஆகும்.

❁

வி. காத்தப்பெருமாள், சிங்கம்புணரி.

வடமொழி 'ஸ'வின் எழுத்தொலி, தமிழ் 'ச'விலேயே பல இடங்களில் ஏற்படுகிறது. உதாரணம் காசு, பாசம், மாசு, இந்த ஒலியும் வடமொழியிடமிருந்து இரவலா?

தமிழிலே மற்ற வல்லெழுத்துக்களைப்போல 'ச'கரத்துக்கும், இடவேறுபாட்டால் பல ஒலிகள் உண்டு. இரட்டிக்குமிடத்தில் இயற்கை ஒலியும், மெல்லெழுத்துக்களின் பின் மெல்லொலியும், சொல்லின் இடையே இரு உயிர்களுக்கு நடுவில் மற்றொரு ஒலியும் அதற்குண்டு. காசு, பாசம், மாசு ஆகிய சொற்களிலுள்ள ஒலி, இம் மூன்றாவது ஒலிதான். இது பண்டைத் தமிழுக்கு உரியஒலியே. ஏனெனில், தமிழோடு இணைந்த மலையாளம், தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளில் இந்தச் சொற்கள் இந்த ஒலியுடனேயே வழங்குகின்றன. சம்ஸ்கிருத எழுத்துக்கள் அம்மொழியில் புகுத்தப்பட்டுள்ள நிலையில் அவை ஒலிப்புக்கேற்ப சமஸ்கிருத எழுத்துக்களாலேயே குறிக்கப்படுகின்றன. இவ் ஒலி சமஸ்கிருதத்திலிருந்து வந்ததல்ல என்பதைக் காட்ட இந்த ஒப்புமை போதுமானது. அதுமட்டுமல்ல, மாதா, பிதா முதலிய சமஸ்கிருதச் சொற்கள் மலையாளம் முதலிய மொழிகளில் பொது எழுத்துக்களாலேயே எழுதப்படுபவை. ஆனால் இடையே வரும் 'த'கரத்தின் ஒலி, தமிழில் மாறுபடுவது போலவே அவற்றிலும் மாறுபட ஒலிக்கப்படுகிறது.

❁

மோ. சுந்தரேசன், திருக்காட்டுப்பள்ளி

சங்க இலக்கியப் பாடல்களில் தமிழ் நடை கடுமையாக இருக்கிறது. இராமகாதையில் எளிமை பெற்று விளங்குகிறது. இதற்குக் காரணம் என்ன?

சங்க இலக்கியப் பாடல்கள் பழைமை வாய்ந்தவை, அத்துடன் அவை பெரும்பாலும் பொறுக்கி எடுக்கப்பட்ட பாடல்களின் தொகுதிகள். புலவர்களால் புலமையும், கல்வியும் முன்னேறியிருந்த ஒரு காலத்தில் எழுதப்பட்டவை. இராம காதையோ காலத்தால் நமக்கு மிகவும் அருகில் உள்ளது. அது கதைசார்ந்த காவியம். புலவர்கள் சங்கத்தில் இயற்றப் பெறவுமில்லை. புலவர்களுக்காக இயற்றப் பெறவுமில்லை. தமிழகத்திலே தமிழும், தமிழ்க்கல்வியும் தட்டுக்கெட்டு தமிழில் பிறமொழிகள் ஆதிக்கம் செலுத்திய காலத்தில் பொதுமக்களிடையே சமயப் பிரச்சாரம் கருதி அது எழுதப்பட்டது. கடுமை, எளிமைத் தோற்றம் ஓரளவு இவற்றால் ஏற்படுவது இயல்பு.

உண்மையில் சங்க இலக்கியப் பாடல்கள் அவ்வளவு கடுமை வாய்ந்தவையுமல்ல. இராம காதை, அவ்வளவு எளிமை வாய்ந்ததுமல்ல. இரண்டு காலத்தையும்விட இன்று தமிழும் தமிழ்க் கல்வியும் மிகுதியாகத் தட்டுக் கெட்டுள்ளன. இரண்டு காலத்தையும்விட இன்று மிகுதியான அயல் மொழிகள் ஆதிக்கம் செலுத்துகின்றன. ஆகவே உரை இல்லாமல் இன்று சங்கப் பாடல்களையும் ஒருவர் எளிதில் உணர முடிவதில்லை. இராம காதையையும் ஒருவர் உணர முடிவதில்லை.

இராம காதையில் வரும் சொற்களைவிட சங்கப் பாடலகளில் வரும் சொற்கள் உண்மையில் பிறமொழி புகாத நாட்டுப் புறங்களிலும் தமிழ்ப் பழங்குடி மக்களிடையிலும் மிகுதியாக வழங்குபவை. இராம காதை எளிதாயிருப்பது ஆரியப் பண்பாடுகளுடனும், அயல் மொழிப் பண்பாடுகளுடனும் மிகுதி கலந்த நகர மக்களிடையிலும், ஆட்சி வகுப்பினரிடையிலும்தான். மற்றவர்களுக்குச் சங்கப்பாடல்களே மிகவும் எளிமையானவை. ஆனாலும் இராமகாதைக்கு ஆட்சி வகுப்பினரிடையே செய்யப்படும் பிரச்சார விளக்கங்கள் அதிகம். டி. கே. சி., ரா. பி. சேதுப் பிள்ளை, பி. ஸ்ரீ. போன்றவர்கள் சந்திபிரித்து எழுதியும், அச்சிட்டும், கால்புள்ளி முற்றுப் புள்ளிகளிட்டும் அதை எளிமைப்படுத்தும் பணியில் பெரிதும் பாடுபட்டுள்ளனர். சங்க இலக்கியத்திற்கு இம்முயற்சிகள் செய்யப்பட்டால், அவற்றிற்கு இராம காதை அளவு கூட உரைகள் தேவைப்படமாட்டா.

❁

கோ. சாரங்கபாணி, வத்ராயிருப்பு

வள்ளுவர் காலம் மிகவும் முந்தியது என முடிவு காட்டுவதால் தமிழுக்கு ஏதாவது பெருமை உண்டா?

பெருமை இல்லை: உரிமை உண்டு. பிந்தியது என்று காட்டுபவர் சமஸ்கிருதத்திற்குப் பெருமையும், தமிழுக்கும் தமிழ்ப் பண்பாட்டுக்கும் பெரிதும் ஊறு தேட முயல்பவர் என்பது மொத்த நோக்காக நோக்கும் தமிழ்ப் பற்றுளர்களுக்கு விளங்காமல் போகாது.

ஐம் பெருங் காப்பியங்கள் காட்டும் பல்வேறு சமயக் கருத்துக்கள் எந்தக் காலத்தில் தமிழகத்திலிருந்து மறைந்தன? தமிழகத்தில் இந்து சமயம் தலை தூக்கியது எப்போது?

இந்திய மொழிகளிலே சமய அடிப்படையில் இலக்கிய அடுக்குகள் கிழ்வரும் வரிசையில் அமைந்துள்ளன. (அ) புத்த, சமண சமயங்களுக்கு முற்பட்டவை (ஆ) புத்த சமயம் சார்ந்தவை (இ) சமண சமயம் சார்ந்தவை (ஈ) சைவ சமயம் சார்ந்தவை (உ) வைணவ சமயம் சார்ந்தவை (ஊ) இந்து சமயம் என்று கூறப்படும் ஆரிய சமயம் சார்ந்தவை.

இவற்றுள் பெரும்பாலானமொழிகளில் கடைசிப்படி அல்லது கடைசி இரண்டு படி அடுக்குகளே உள்ளன. சமஸ்கிருதத்திலோ சைவ காலம் முதல் இலக்கிய வளர்ச்சி காண்கிறோம். தெலுங்கில் ஓரளவும், கன்னடத்தில் இன்னும் மிகுதியாகவும் புத்த, சமண, சைவ இலக்கியங்கள் இடம் பெறுகின்றன. ஆனால் தமிழில் மட்டுமே எல்லாப் படிகளும் உள்ளன. சமய அடிப்படையில் எல்லாச் சமய வாழ்வுக்காலங்களும் உட்பட்ட முழு தேசிய இலக்கியம் தமிழ் ஒன்றே.

ஐம்பெருங் காப்பியங்களில் புத்த சமண காலத்துக்கு முற்பட்டவை உண்டு. புத்த, சமண காலத்தவை பல. இச் சமயங்கள் தமிழகத்தில் ஏழாம் நூற்றாண்டிலிருந்து படிப்படியாகத் தேய்வுற்றன. ஆனால் புத்த சமயம் பன்னிரண்டாம் நூற்றாண்டு வரையும் தென்னாட்டில் சிறிது இடம் பெற்றிருந்தது. சமண சமயமோ பதினாலாம் நூற்றாண்டு வரையும் தமிழகத்தில் ஓரளவும், கன்னட நாட்டில் பேரளவும், பரவியிருந்தது. இன்றும் தென்னாட்டில் ஓரளவும், குஜராத்தில் மிகுதியாகவும் அச்சமயத்தவர் வாழ்கிறார்கள்.

மிளகு தண்ணி அழகு சுந்தரம்

திருவாளர் மிளகு தண்ணி அழகு சுந்தரத்தைப் பற்றிப் பலருக்கு அதிகமாகத் தெரியாது. அவர் ஒரு போலீஸ்காரர். அவருக்கும்போலீஸ் இலாகாவுக்கும் பிடித்தமே கிடையாது. அப்படியிருக்க, அவர் போலீசில் எப்படிச் சேர்ந்தார் என்பது தான் பலபேருக்குப் புதிராக இன்றுவரை இருந்துவருகிறது. நான் அவருடன் ஆதியிலிருந்தே பழகி வந்ததால், எனக்குத் தெரியும் அதன் உள் ரகசியம்.

திருவாளர் மிளகு தண்ணிக்கு மேற்படி பெயர் வந்த காரணமே ஒரு பெரிய சரித்திரம்! அவர் சிறு பிள்ளையாக இருந்தபோது, அவர் வீட்டுக்கு யாரோ உறவினர்கள் வந்தார்களாம். அவர்கள் அழகு சுந்தரத்தைப் பார்த்து, "உனக்கு அதிசயமான பொருள்கள் ஏதாவது வேண்டுமா? உன் விருப்பத்தைச் சொல்" என்று கேட்டார்களாம். நண்பர் அழகு சுந்தரம் முதலிலே தயங்கினாராம். பிறகு துணிச்சலை வரவழைத்துக் கொண்டாராம். தொண்டையை ஒருமுறை கனைத்துக்கொண்டாராம். அந்த உறவினர்கள் அவரது தோரணையைப் பார்த்து அவர் ஏதோ பெரிய பொருள் ஒன்றினுக்கு அடிப்போடப் போகிறார் என்று பயந்து விட்டார்களாம். கடைசியில் நமது திருவாளர், "எனக்கு 'மிளகு தண்ணி' வேண்டும்" என்று கேட்டாராம். உறவினர்கள் இதைக் கேட்டதும் சிரிக்க ஆரம்பித்தவர்கள், இன்றுவரை சிரித்துக்கொண்டிருப்பதாகக் கேள்வி.

இதைவிட இன்னொரு வரலாறு உண்டு! அவர் வேலைக்கு வந்த பின்புதான் இந்தப் பட்டப்பெயர் ஏற்பட்டது என்று சிலர் சொல்கிறார்கள். அப்படிச் சொல்பவர்களின் கருத்தை எண்ணும்போது, அவர்கள் சொல்வது உண்மையாக இருக்கலாம் என்றே படுகிறது. ஆரம்ப காலத்தில் இவர் சாதாரண போலீசாகத்தான் இருந்தார். சுறுசுறுப்பு என்பதே நமது 'மிளகு தண்ணி'யிடம் கிடையாது. காரணம், அவர் வசப்பிசகாக போலீசில் வந்து சேர்ந்ததுதான். தன்னிடம் சுறுசுறுப்பு இல்லை என்பதை அவரே தெரிந்து வைத்திருந்தார். அந்தக் கவலை அவர் மனதை வாட்டி எடுத்தது. அதன் பயன் அவர் உடல் நாளொரு அகலமும், பொழுதொரு உயரமுமாகப் பெருத்துக்கொண்டே போனது. பல நாட்களாக இரவு பகல் ஓயாது சிந்தித்தார். எப்படியும்ஒரு 'ஏட்டையா' வாகி விடவேண்டும் என்று முடிவு செய்தார். எப்படியோ அவருக்கும் ஒரு நல்ல யோசனை தென்பட்டது.

ஊர்க்கோடியில் உள்ள பாழடைந்த மண்டபத்தில் சில சூதாடிகள் சூதாடுகின்ற செய்தி திருவாளர் மிளகுதண்ணியின் காதுக்கு எட்டியது. அவர்களை எப்படியாவது பிடித்துவிடக் கங்கணம் கட்டினார். அதற்குரிய வழியைச் சிந்தித்தார். இறுதியில் வழி கண்டு பிடித்துவிட்டார். மிளகு தண்ணியைப் பெரிய அளவில் தயாரித்தார். தான் மிளகுதண்ணி விற்பவராக மாறிக்கொண்டார். அந்தச் சூதாடிகள் இருக்கும் இடம் நோக்கிச் சென்றார். அங்கே தன் வியாபாரத்தை விரிவான முறையிலே ஆரம்பித்தார். சூதாடிகள் மிளகு தண்ணியைப் பிரியமாக வாங்கிக் குடித்தார்கள். 'சில்லறை'யைய அதிகமாகவும் கொடுத்தார்கள். ஆனால், சில நிமிஷ நேரத்தில் அவர்கள் ஒருவர்பின் ஒருவராக மயங்கி விழ ஆரம்பித்தார்கள். எல்லாம் திருவாளரின் சாமர்த்தியம்தான்! மிளகுதண்ணியில் மயக்க மருந்தைக் கலந்துகொடுத்துவிட்டதால் தான் மேற்படி சூதாடிகள் மயங்கி விழுந்தார்கள். உடனே விசிலடித்தார் நமது நண்பர். அவ்வளவுதான், ஏராளமான சகபாடி போலீஸ்காரர்கள் ஓடோடி வந்தார்கள். சூதாடிகளின் கரங்களிலே சுலபமாக 'வெள்ளிக்காப்புகளை' மாட்டி, நீல வாகனத்திலே ஏற்றிச் சென்றுவிட்டார்கள். இந்த நிகழ்ச்சிதான் அவருக்கு 'மிளகுதண்ணி' என்ற அடைமொழியைத் தந்துவிட்டது என்று சொல்கிறார்கள். அடைமொழியை இந்த நிகழ்ச்சிதான் தந்ததோ, என்னவோ, ஆனால் அவருக்கு 'உத்யோக உயர்'வைத் தந்தது என்பது மட்டும் உண்மை!

இன்னொரு உண்மை நிகழ்ச்சி உண்டு! இதைக் கேள்விப்பட்டால் நமது நண்பர்களின் மனம் கோபப்படும். அதிலும் போலீஸ் நண்பர்கள் சற்றுப் பொறுமுவார்கள். என்ன செய்வது? சொல்லித்தானே தீரவேண்டியிருக்கிறது? அதனால் சொல்லிவிடுகிறேன். நமது திருவாளர் மிளகு தண்ணி, ஆரம்ப நாட்களிலே ஒரு ரௌடியாக இருந்தார். ஊரிலே எங்கேயாவது ரகளை என்றால் அங்கே நமது 'மிளகுதண்ணியார்' தான் முன்னாலே நிற்பார். ஒருநாள், உள்ளூரிலே கடைத் தெருவிலே நின்றுகொண்டு கலாட்டா செய்து, ரௌடி என்ற திருநாமத்தை அணிந்து கொண்டிருந்தார். ரௌடிஎன்று சொல்லி அவரைப் பிடிக்கவந்த 'செந்தலையின்' கன்னத்தில் சரியாக 'நாலைந்து' தந்துவிட்ட காரணத்தால், பாவம், போலீஸ் இலாகா நமது திருவாளரைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி, ஆறு மாத நன்னடத்தை ஜாமீன் கேட்டது. நமது திருவாளரும், பாவம், தினந்தோறும் போலீஸ் ஸ்டேஷன் சென்று, சிரமப்பட்டு, கையைநீட்டி கையெழுத்துப் போட்டுத் திரும்ப, வேண்டிய கண்றாவி நிலைக்கு வந்துவிட்டார். இப்படி இருந்தவர், திடீரென்று ஒருநாள் போலீஸ் வேலையில் சேர்ந்துவிட்டார் அதே ஊரில்! இப்படி போலீஸ்காரரை அடித்துவிட்டு, பின்பு அதே போலீசில் சேர்ந்ததைப் பார்த்த நண்பர்கள் அவருக்கு 'மிளகுதண்ணி' என்ற திருப்பெயரைச் சூட்டினார்களாம்.

இவர்தான் திருவாளர்
மிளகுதண்ணி

இது நிற்க. அவர் போலீசில் சேர்ந்து விட்ட செய்தி அவரது பழைய ரௌடி நண்பர்களுக்கு காட்டுத் தீ போல் எட்டியது. அவர்களில் பலருக்கு ஆச்சரியமும் அதிசயமும் தோன்றிக் கொண்டே இருந்தன. சிலர், துணிச்சலாக திருவாளர் மிளகு தண்ணியிடமே வந்து காரணம்கேட்டார்கள். அவர்தான் அசகாய சூரராயிற்றே? சொல்வாரா காரணத்தை! சொல்லவே இல்லை.

நானும் அவரை நெருங்கி, சமயம் நேரும்போதெல்லாம், அவர் போலீசில் புகுந்த காரணத்தைக் கேட்பேன். அவர் சொல்கிறேன் சொல்கிறேன் என்று சொல்லி நாளைக் கடத்தி வந்தார்—இப்படிப் பட்ட 'மகானுபாவர்' சென்ற வாரம் என்னிடம் தலை தெறிக்க ஓடோடி வந்தார். அவரது பயத்தைக் கண்டு நானே பயந்து விட்டேன். என்னய்பா விஷயம் என்று விசாரித்தேன்.

ஒரு பிரபல ரௌடியைப் பிடித்துவா என்று மேலதிகாரி நமது மிளகு தண்ணிக்குக் கட்டளையிட்டிருக்கிறார். இவரும் துணிச்சலாக, அந்த ரௌடியைப் பிடிக்கச் சென்றார். ரௌடியின் வீட்டுக்குள்ளே சென்று ரகளை செய்தார். இன்னொரு ஜவானின் உதவியால், எப்படியோ அந்த ரௌடியின் கையில் வெள்ளிக் காப்பை மாட்டி விட்டார். அவனை இழுக்க முற்படும்போது வீட்டுக்குள்ளே இருந்து 'அண்ணேன்' என்று ஒரு பெண் குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தார் நமது மிளகு தண்ணி. அவ்வளவுதான்! அதற்கு மேல் அங்கே அவர் நிற்கவில்லை. வீட்டுக்கு ஓடிவந்து விட்டார். கூடச் சென்ற போலீஸ்காரர் போன திக்குக் கூடத் தெரியவில்லை.

நண்பர் மிளகு தண்ணி வீட்டுக்கு வந்த பின்புதான், 'வெள்ளிக் காப்பை' ரௌடியின் கையில் போட்டுவிட்டு, தான் மட்டும் ஓடி வந்துவிட்ட செய்தி நினைவுக்கு வந்தது. போலீஸ்காரர்கள், வெள்ளிக் காப்பை இழந்து விட்டால், அவர்களது வேலையை இழக்க நேரும் என்பது போலீஸ் விதி. இது நினைவுக்கு வந்த பின்புதான் தலை தெறிக்க என்னிடம் ஓடி வந்தார். பாவம். அவருடைய நிலை பரிதாபமாகத்தான் இருந்தது! அந்தச் சமயத்தில் நான் அவருக்குக் கட்டாயம், உதவி செய்ய வேண்டிய நிலைதான் ஏற்பட்டது. அதனால், திருவாளர் மிளகு தண்ணியை அழைத்துக் கொண்டு, அந்த ரௌடியைப் பார்க்கலாம் என்று புறப்பட்டேன்.

அங்கே போன பின்புதான் நண்பர் மிளகு தண்ணி போலீஸ் இலாகாவுக்கு வந்து சேர்ந்த ரகசியம் வெளியாகிவிட்டது. வேறொன்றுமில்லை! அந்த ரௌடியின் தங்கையை நண்பர் மிளகு தண்ணி காதலித்தாராம். திருமணம் செய்து கொள்வதாகவும் சொன்னாராம். ஆனால், பணக்காரர் ஒருவர் தன் மகளை மிளகு தண்ணிக்குக் கொடுப்பதாகச் சொன்னதால், பாவம் மிளகு தண்ணி தன் காதலியை மறந்து விட்டார். இந்தச் செய்தி அறிந்த மேற்படி ரௌடி, நமது மிளகு தண்ணியைச் செம்மையாக அடிக்கத் திட்டம்போட்டிருக்கிறான். இது தெரிந்ததும் நமது மிளகு தண்ணி பயந்து போய் விட்டார். ஓடிப்போய் போலீசில் அடைக்கலம் புகுந்து விட்டார். அதாவது போலீஸ்காரராகச் சேர்ந்து விட்டார். அப்புறம்தான் அவர் பயம் ஒழிந்தது. தன்னை யாரும் இனி அடிக்க வர முடியாது என்ற தைரியம் அவருக்கு ஏற்பட்டு விட்டது.

இதிலே இன்னொரு வேடிக்கை நடந்தது. இந்தக் காதல் விவகாரம் எப்படியோ அந்தப் பணக்காரரின் காதுக்கு எட்டியது. அவ்வளவுதான்! நமது மிளகு தண்ணிக்குப் பெண் தரும் திட்டத்தை ரத்து செய்து விட்டார் அவர். அன்று முதல் நமது மிளகு தண்ணியார் ஒண்டிக் கட்டையாகவே வாழ்ந்து வருகிறார்.

இந்த இக்கட்டான நிலைமையைத் தெரிந்து கொண்டேன். நமது நண்பர் மிளகு தண்ணிக்காக ரௌடியிடம் வாதாடினேன். வெள்ளிக் காப்பைத் தந்துவிடுமாறு கேட்டேன். அந்த ரௌடி நாணயமானவன். தான் கைதியாகவே வருவதாக ஒப்புக் கொண்டான். நண்பர் மிளகு தண்ணியின் கண்ணிலிருந்து நீர்த்துளிகள் திணறிக் கொண்டு வெளிவந்தன. ரௌடியின் தங்கை, நண்பர் மிளகு தண்ணியின் காதலி அங்கே வந்து நின்றதைப் பார்த்துக்கொண்டிருந்ததனால்தான் அவர் கண்ணீர் விட்டார் என்ற செய்தி பிற்பாடுதான் எனக்குத் தெரிந்தது. நான் சமாதானம் செய்யச் சென்றேன். அது எங்கேயோ சுற்றி, நண்பருக்கும், அவருடைய காதலிக்கும் திருமணத்திலே முடிந்தது! வாழ்க, நண்பர் மிளகு தண்ணி அழகு சுந்தரம்! வாழ்க அவரது மனைவியார்! ★

★ தமிழ்ப்பித்தன் ★

மக்கள் விரும்பினால் சர்வாதிகாரமும் மக்களாட்சியே!

— 2ம் பக்கத் தொடர்ச்சி —

வேறு கட்சிகள் அங்கு இயங்க விடுவதில்லை. இரண்டாம் உலகப் போரின் போது, சர்ச்சில் தெரிந்தெடுத்த "இரும்புத் திரை" (**Iron Curtain**) என்ற வார்த்தை இன்றும் சோவியத் நாட்டை அழகாகச் சுட்டிக் காண்பிக்கின்றதல்லவா?

இரண்டாவதாக, "1973-ம் ஆண்டுக்குள், உலகம் முழுவதையும் தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்துவிட வேண்டுமென 'கிரெம்லின்' திட்டமிட்டிருக்கிறது. இப்பொழுதைய வேகத்தில் கம்யூனிசம் முன்னேறுமானால், தனது குறிக்கோளை இன்னும் 16 ஆண்டுகளில் அது நிறைவேற்றிக்கொள்ளும்" என ஆஸ்திரேலிய கிறித்துவ கம்யூனிஸ்ட் எதிர்ப்பு இயக்கத் தலைவர் கூறியுள்ளார். ரஷ்யாவின் ஏகாதிபத்தியக் கொள்கை இதன்மூலம் நன்கு புலனாகின்றதல்லவா?

மூன்றாவதாக சென்ற ஆண்டு அக்டோபர் திங்களில் எழுந்த 'அங்கேரி சுதந்திரக் கிளர்ச்சி'யை கடுமையாக ஒடுக்க நினைத்த தன்மையும் அங்கு 'சோவியத் யூனியனின்' படைகள் புரிந்த கொடுமைகளும், ஐ. நா. பொதுச் செயலாளர் திரு. ஹாமர்ஷில்டை 'அங்கேரி'யினுள் அனுமதிக்க மறுத்ததும், ஐ. நா. தூதுக்குழு வெளியிட்ட அறிக்கை, ரஷ்யாவின் ஆதிக்க வெறியை அம்பலமாக்கியதும் ரஷ்யா ஒரு ஏகாதிபத்ய வெறிகொண்ட நாடுதான் என்ற வாதத்தை அசைக்க முடியாத உண்மைகள் நிறைந்த ஒன்றாகச் செய்கிறதல்லவா?

ரஷ்யா ஒரு ஏகாதிபத்திய நாடு என்பதை உறுதிப்படுத்த இத்தகைய காரணங்களைக் காண்பிக்கலாம்.

ஆனால், இங்கு காண்பிக்கப்படும் காரணங்கள் அனைத்தும் ரஷ்யா ஒரு முற்போக்குச் சக்தி அல்ல என்பதற்கு அளிக்கப்படும் மறுப்புகளாக நாம் கொள்ள முடியாது. ரஷ்யாவின் நடவடிக்கைகள் எதிர்பாராமல் அச்சுறுத்துவதாக அமைந்துவிட்டால், அதன் அடிப்படைக் கொள்கையில் அமைந்து கிடக்கும் முற்போக்குச் சக்தியை சந்தேகித்தல் ஆய்வாளனுக்கு அழகல்ல.

முதலாவது குற்றச்சாட்டு சர்வாதிகாரத் தன்மை குறித்து எழுப்பப்பட்டது. லெனின் மறைவிற்குப் பிறகு நிகழ்ந்த நிகழ்ச்சிகள், ஸ்டாலினை தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு தூண்டின. 1924ம் ஆண்டிற்குப் பிறகு, ருஷ்யாவில் ஸ்டாலினுக்கும் டிராட்ஸ்கிக்கும் பகைமை மூண்டது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் முற்போக்கு சக்திக்கும், ஏகாதிபத்ய ஆசைக்கும் பகைமை வளர்ந்தது எனக் கூறலாம். ஏனெனில் 'டிராஸ்கி'யின் விருப்பம் புரட்சி தொடர்ந்து நடைபெற வேண்டும்; அதன் விளைவாக ஆழிசூழ் உலக மனைத்தும் ஒரு குடைக்கீழ் வந்து 'கம்யூனிசம்' ஆகவேண்டும். ஸ்டாலின் இதை மறுத்தார். முதலில் ருஷ்யாவில் நாம் 'சமத்துவத்தைப்' பரிசோதித்துப் பார்ப்போம் எனக் கூறினார். 1929-ல் டிராட்ஸ்கி நாடு கடத்தப்பட்டார். ஸ்டாலின் வெற்றி கண்டார். பிறகு டிராஸ்கியின் நண்பர்கள் தரும் தொல்லையைப் போக்க ஸ்டாலின் குறுக்கு வழியைக் கையாண்டார். அவ்வழிகள் தான் மாற்றாரை மருளச் செய்கின்றன. எதிரிகள் இருந்த இடம் தெரியாமல் ஆக்கப்பட்டனர். அந்தச் சூழ்நிலையில் ஸ்டாலினைப்போல் வேறு யார் இருந்தாலும் அந்தக் கொள்கையையே பின்பற்றியிருக்க நேரிட்டிருக்கலாம். தனது கொள்கையை,-அது உண்மை எனத் தெரிந்தால்,-நிறைவேற்ற எந்த வழியையும் பின்பற்ற ருஷ்யக் கம்யூனிஸ்டுகள் தயங்கார். எனவேதான் ஸ்டாலின் மறைவிற்குப் பின் 'பெரியா' மறைக்கப்பட்டார்.

ருஷ்யாவில் நடப்பது தனிமனிதனின் சர்வாதிகாரமல்ல. லெனின் 'பாட்டாளி மக்களின் சர்வாதிகாரத்தை' (**Dictatorship of Proletariate**) ஏற்படுத்த விழைந்தார். சில அரசியல் தலைவர்கள் அதனை 'குவிக்கப்பட்ட ஜனநாயகம்' (**Democratic Centralism**) எனப் பெயர் சூட்டுகின்றனர். ஜனநாயகம் என்பது கூர்மையும் மென்மையும் கொண்ட ஒரு பொருள். அதை உபயோகிக்கும் விதத்தில்தான் இருக்கிறது. அது தரும் பலனும் பாடமும், இந்தியாவில் நடப்பது 'பார்லிமெண்டரி ஜனநாயகம்' என்றால் ருஷ்யாவில் நடப்பது 'குவிக்கப்பட்ட ஜனநாயம் (**Democratic Centralism**). சோவித் யூனியனில் எந்தத் திட்டமும் எதேச்சாதிகாரமாகக் கொண்டு வரப்படுவதில்லை என்பதை நாம் உணரவேண்டும். பலத்த விமர்சனத்திற்குப் பிறகு திட்டம் நடைமுறைக்கு வருகிறது. ஆனால் அது குறித்து பிறகு இகழ்ச்சிக் குறிப்புகள் அனுமதிக்கப்படுவதில்லை. மேலும் தனி மனிதனின் உரிமை அங்கு பறிக்கப்பட்டு இருக்கிறது என்று கூறுவதைவிட, அத்தகைய உரிமை அங்கு, கடமை, கண்ணியம் என்ற உணர்ச்சிகளிடையே கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறது என்று கூறுவது பொருந்தும். கட்டுப்பாடு இல்லாமையால் 'பாகிஸ்தானில் நடக்கும் அலங்கோலங்களை நாம் காண்கிறோம். கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றே அங்கு நிலவ உரிமை உண்டு என்ற வாதத்திற்கு அவர்கள் தரும் பதில் வகுப்பு வேறுபாடு இல்லாத ஒரு அமைப்பில் (**Classless Society**) பல கட்சிகள் இருப்பது நியாயமுமல்ல தேவையுமல்ல என்பதே. உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பேதம் நீக்கப்பட்டபின் பலதிறப்பட்ட கட்சிகளுக்கும் பூசல்களுக்கும் இடமேது? ஒரு நாட்டில் மக்கள் விரும்புவதெல்லாம் உண்ண உணவு, இருக்க இடம், உடுக்க உடை மற்ற வாய்ப்புக்களும் வசதிகளும் ஒருங்கே கிடைத்து மக்களிடையே அமைதி நிலவ வேண்டுமென்பதே. இன்றைய நிலையில் ருஷ்யா அத்தகைய தகுதியைப் பெற்று ருஷ்ய மக்கள் செழிப்புடன் வாழ்ந்து வருவது கண்கூடு. அங்கு அவர்கள் கண்ட குறிக்கோளை 'சோஷலிசம்' என்ற அழகான திரையிட்டு நமது நாட்டிலும் அடைய முயல்கின்றனர். இவர்கள் 100 ஆண்டுகள் முயன்று முடிக்க இயலும் ஒரு இலட்சியத்தை 20 ஆண்டுகளில் அவர்கள் முடித்துக் காண்பித்துள்ளனர். இதில் தவறென்ன இருக்கிறது? ஐந்தாண்டுத் திட்டங்கள் ருஷ்யாவில் நான்கே ஆண்டுகளில் முடிக்கப்பட்டு விட்டன. அமைதியின் பிறப்பிடமும், பஞ்ச சீலத்தின் உயிர்ப்பிடமுமான நமது நாட்டின் நிலை என்ன? அப்படியொன்றும் ருஷ்யா ஒழுங்கான பாதையை விட்டு ஓரமாகப் போய்விடவில்லையே! போகும் முறையில் வேறுபாடு இருந்தால் போக்கே தவறென்று கூற யாரும் ஒப்பார். திக்கு ஒன்றுதான், போகும் போக்கில் தானே மாறுபாடு!

இரண்டாவது குற்றச்சாட்டு, கம்யூனிசம் வேகமாகப் பரவி வருகிறது. இன்னும் 16 ஆண்டுகளில் உலக மனைத்தும் பொதுவுடைமை ஆகிவிடும். ஏகாதிபத்ய ஆசை இன்னும் அவர்களை விடவில்லை. ஹிட்லரின் மகத்தான தோல்வியே இதற்குச் சான்று. 'செம்புலப் பெய்யல்நீர்' போல பொதுவுடைமைத் தத்துவம் நிலத்துநிலம் மாறுபடுகிறது. அண்மையில் 'யுகோஸ்லாவியாவின்' அதிபர் மார்ஷல் டிடோ எழுப்பிய குரல் உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துள்ளது. ருஷ்யக் கம்யூனிஸ்டுகளின் விரிந்த இதயமும் நமது நாட்டு செஞ்சேனை வீரர்களின் உள்ளப் பண்பும் ஒப்பிடுதல் நமது கருத்துக்குச் சான்று பகரும். எனவே அத்தகைய கருத்து அச்சத்தின்பால் எழுந்ததே தவிர நல்லெண்ணத்தினால் அல்ல என்பதை உணர வேண்டும். எந்த நாடும் தனது கொள்கைகளை பிறரிடம் வலியுறுத்தாமலிருந்ததில்லை. இந்திய வெளிநாட்டுக் கொள்கை, யாரிடத்திலும் சாராமல் தனித்து நின்று அமைதிக்குப் பாடுபடுவது (**Non-alignment**) என நேருப் பண்டிதர் கூறி வருகிறார். அதே போன்று சோவியத் யூனியன் பொதுவுடைமைத் தத்துவம் பரவப் பாடுபடுகிறது. கம்யூனிசக் கொள்கையை யாரும் இதுவரை சந்தேகித்தது கிடையாது. கம்யூனிஸ்டுகளைத்தான் சந்தேகிக்கிறார்கள். எனவே கம்யூனிசம் வளர்ந்த நாடான ருஷ்யா முற்போக்கு சக்தி தானே!

மூன்றாவது குற்றச் சாட்டு 'அங்கேரி' நிகழ்ச்சி பற்றியது. அங்கேரியில் சோவியத் நாடு நடத்திய திருவிளையாடல்களைக் கண்டிக்காத நாடும் இல்லை ஏடும் இல்லை. புரட்சியின்போது ஐ. நா. பொதுச் செயலாளர் 'ஹாமர் ஷில்ட்' அங்கேரியினுள் அனுமதிக்கப்படவில்லை. ஐ. நா. தூதுக் குழுவுக்கும் அப்போது அனுமதி இல்லை. பிறகு அது வெளியிட்ட அறிக்கை ருஷ்யாவின் ஆதிக்க வெறியைச் சுட்டிக் காண்பிக்கிறது. வேற்று சக்தியின் நுழைவு சோவியத் யூனியனின் தன் மானத்தைப் பாதித்தது என்ற நினைப்புடன் ருஷ்யா ஐ. நா. அறிக்கையைக் கடுமையாகத் தாக்குகிறது. மேலும் அங்கேரியிலும் ருமேனியாவிலும் ஒரு திங்கள் தங்கிவிட்டுத் திரும்பிய நமது நாட்டு மக்கள் சபை சுயேச்சை உறுப்பினர் 'சிமென்லால் சாக்சினா,' அங்கேரி புரட்சிபற்றி ஐ. நா. தூதுக் குழு வெளியிட்ட அறிக்கை உண்மையானதல்ல, ஓடிப் போன அகதிகளின் வாக்குமூலத்தைக் கொண்டு உருவாக்கியது எனக் கூறுகிறார். அண்மையில் சீனப் பிரதமர் சூ-என்-லாய் அங்கேரி நிகழ்ச்சிக்குப் பின் சோஷலிச முகாமில் ஒருமைப்பாடு அதிகரித்திருப்பதாகக் கூறினார்.

குறையும் நிறையும்

ஏனைய ஏகாதிபத்ய நாடுகளோடு ரஷ்யாவை ஒப்பிடும்போது அதன் உண்மையான தகுதியும் தரமும் வெளிப்படுவதைக் காணலாம். அண்மையில் அமெரிக்கன் டெலிவிஷன் பேட்டி ஒன்றில் 'குருஷேவ்', சோவியத் படைவீரர்கள் 18 லட்சம் பேர் குறைக்கப்பட்டு, பின்லாந்து தளத்தையும் திருப்பிக் கொடுத்திருக்க, அதைப் போன்று மேனாடுகள் நடவடிக்கை ஏதும் 'எடுக்கவில்லை' எனச் சுட்டிக் காட்டினார். ஆதிபத்ய வெறியாட்டம் அமெரிக்கா 600 கோடி டாலர்கள் செலவழித்து 'சியாங்கே ஷேக்'கை பதவியிலமர்த்தத் தூண்டியது. ஆனால் அது வழங்கிய கருவிகளனைத்தும் மோசேதுங்கினிடமே சிக்கிவிட்டன என மேலும் குறிப்பிட்டார். அண்மையில் பாக்தாத் கூட்டின் ராணுவ அமைப்பிலும் அமெரிக்கா பகிரங்கமாக சேர்ந்துள்ளது. கம்யூனிஸ்டுகளின் பலத்த ஆக்ரமிப்பை எதிர்த்து நிற்க விரும்பும் நாடுகளுக்கு ஆதரவளிப்பதே தங்கள் கருத்து என அமெரிக்கப் பிரதிநிதி பாக்தாத் கூட்டு சபையில் பேசியுள்ளார். சமன் செய்து சீர்தூக்கும் சீரியர் ஓர் உண்மையை உணர்வர். மத்திய கிழக்கு நாடுகளில் எதற்கும் இதுவரை ருஷ்யாவினால் தொல்லையோ, குழப்பமோ ஏற்பட்டதில்லை. அதற்கு மாறாக பாக்தாத் கூட்டு அமைப்பில் முக்கிய அங்கம் வகிக்கும் பிரிட்டன் மத்திய கிழக்கு நாடான எகிப்தில் தனது இராணுவ பலத்தைச் சோதித்ததை இதுகாறும் மறந்திருக்க முடியாது. எனவே 'ஜனநாயகம்' என்ற போர்வையில் ஏகாதிபத்ய வெறி ஆடும் ஆட்டத்தை நாடு உணர்ந்து கொண்டு வருகிறது.

ருஷ்யாவின் முற்போக்குத் தன்மைக்கு 'படைத்தளப் போட்டி' (**Armament Race**) குறைய தனது இதயப்பூர்வமான ஒத்துழைப்பைத் தர இசைந்ததே போதுமான சான்றாகும். பிரிட்டனும் அமெரிக்காவும் ருஷ்யா தரும் ஒத்துழைப்பை ஏற்க மறுக்கின்றன. அதுமட்டுமன்றி அமெரிக்க வெளிநாட்டு பிரதிநிதி 'ஸ்டரெஸான்', ருஷ்யவெளிநாட்டு பிரதிநிதியுடன் அணு ஆயுதக் குறைப்பு பற்றி பேச்சுவார்த்தை நடத்தியதைக் குற்றமெனக் கருதி பிரிட்டன், அமெரிக்கா, பிரான்ஸ் முதலிய மூன்றுநாட்டுத் தலைவர்கள் அத் தூதரைக் கண்டனம் செய்துள்ளனர். அதே சமயத்தில் ருஷ்ய வெளிநாட்டுத் தூதர் ஆயுதக் குறைப்புபற்றி மூன்று ஆண்டு திட்டம் ஒன்றை நல்லெண்ணத்துடன் உலக நாடுகளுக்கு அறிவித்திருக்கிறார். இது ஆயுதக்குறைப்புப் பேச்சுக்கு ஆக்கமும் ஊக்கமும் தருவதாய் அமைந்துள்ளது. முற்போக்கு சக்தியின் முழு வடிவத்தையும் சோவியத் நாட்டின்பால் உலக மக்கள் உணரும் காலம் வெகு அண்மையில் உள்ளது என்பதற்கு அது பின்பற்றும் கொள்கைகளே தகுந்த சான்று பயக்கும். ★

— 1ம் பக்கத் தொடர்ச்சி —

ஊருணிக்கரைக்கு அவன் வந்தான். அங்கேதான் வெளியூர் பஸ்கள் போகும் பாதை இருந்தது. மதுரையிலிருந்து திருச்சி செல்லும் பஸ்களும், திருச்சியிலிருந்து மதுரை செல்லும் பஸ்களும் அந்தப் பாதையில் உண்டு. எந்த பஸ் முதலில் வருகிறதோ அதில் ஏறிவிடுவது என அவன் தீர்மானித்துக்கொண்டான். அவனுக்குத்தான் எங்கே போவது

என்ற திட்டமில்லையே! ஒரு அரைமணி நேரம் அந்த ஊருணிக்கரையில் உட்கார்ந்திருந்தான். வீட்டிலே தாய் தந்தையர் தன்னைத் தேடுவார்களே என்ற பயமும் கவலையும் அவனை வாட்டி எடுத்தன. அவன் கண்கள் கலங்கின. சிறு வயதிலிருந்தே குடும்பத்தைவிட்டுப் பிரியாமல், கோழிச் சிறகில் குஞ்சாக அடைபட்டுக்கிடந்த அவன் பெற்றோரைப் பிரிந்து வெளியூரில் எப்படி இருக்கப்போகிறோம் என்று ஏங்கினான். அன்றைய அவனது குடும்பநிலை அவன் மனதை அதிக வேதனைப் படுத்திற்று. பேசாமல் வீட்டுக்கே திரும்பிவிடலாம் என்று கூட எண்ணினான். திரும்பி என்ன செய்வது? ஒரு காலணாப் பயன் கூட அற்றவனாக, குடும்பத்திற்கு மேலும் பாரமாக அவன் இருந்தாகவேண்டும். இந்தச் சிந்தனைகளில் அவன் மூழ்கிக்கிடந்த போது, திடீரென்று மதுரைப் பாதையிலிருந்து பஸ் வருவதைக் கண்டான். படபடக்கும் நெஞ்சோடு கையை நீட்டி பஸ்ஸை நிறுத்தினான். முன்சீட்டில் ஏறி உட்கார்ந்துகொண்டான். பஸ் புறப்படும்போது திரும்பி, கிராமத்துப் பாதையைப் பார்த்தான். கலங்கிய அவன் கண்கள் மழையே பெய்தன. இரவில் அவன் வரக் கொஞ்சம் நேரமானாலும் அவன் பெற்றோரின் மனம் பொறுக்காது. கையில் அரிக்கன் விளக்கை எடுத்துக் கொண்டு கிராமம் பூராவும் சுற்றி வந்துவிடுவார் அவன் தந்தை. அன்னையோ பையனுக்கென்று சில மாமிச வகைகளைப் பத்திரமாக வைத்திருப்பாள். இதை எண்ணிக்கொண்டபோது, பஸ்ஸிலிருந்தே குதித்துவிடலாமா என்றே அவனுக்குத் தோன்றிற்று. அவன் மனதைத் திடப்படுத்திக்கொண்டான். திருச்சிக்குப் போய் எங்கேயாவது வேலை தேடிக்கொண்டு, குடும்பத்திற்கு நிறையப் பணம் அனுப்பவேண்டும் என்று முடிவு கட்டிக்கொண்டான். அந்த முடிவைச் செய்துகொண்டானோ இல்லையோ, உடனே அவன் மனதில் கற்பனை பொங்க ஆரம்பித்தது. அவனுக்கு வேலை கிடைத்துவிட்டது போலவும், ஊருக்குப் பணம் அனுப்புவது போலவும், அவன் பெற்றோர் அதைப் பெற்றுக் கொள்வதுபோலவும், மற்றவர்களிடம் சொல்லிப் பெருமைப் படுவது போலவும் – முடிவை ஆரம்பத்திலேயே சிந்தித்துப் பார்த்து அவன் பெருமைப்பட்டான். அவன் மனதில் புதிய உற்சாகம் பிறந்தது. ஆர்வம், பஸ்ஸை விட வேகமாக அவனைத் திருச்சிக்கு அழைத்துச் சென்றது. திருச்சியில் இறங்கியதும் எங்கே செல்வது என்று அவன் திட்டமிட்டுக்கொண்டான். பஸ் புதுக்கோட்டைக்கு வந்ததும், கீழே இறங்கிக் காபி சாப்பிட்டான். தனியாக வெளியூர் சென்று, தானாக ஒன்றை வாங்கி உண்டு அவனுக்குப் பழக்கமில்லை. சாப்பிட்ட காப்பிக்குத் தானே பணம் கொடுத்தபோது, ஏதோ சம்பாதித்த பணத்திலிருந்து கொடுப்பது போன்ற திருப்தி அவனுக்கு ஏற்பட்டது.

திருச்சிக்கு வந்தான். சிறிய தகரப் பெட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு கீழே இறங்கினான். பரபரப்பான அந்த நகரத்தை, அப்போதுதான் அவன் முதன் முறையாகப் பார்க்கிறான். கிராமத்தைக் காட்டிலும் அளவில் நகரம் விசாலமாக இருந்ததைக் கண்டு அவனுக்குப் பயம்கூட ஏற்பட்டது. நகரத்து நாகரிகம் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. பெட்டியைக் கீழே வைத்துவிட்டு, வேட்டியைத் திருத்திக் கட்டிக்கொண்டு, சட்டையின் காலரைக் கொஞ்சம் தூக்கிவிட்டுக்கொண்டு நகரத்தோடு ஒட்டித் தன்னை நாகரிகப் படுத்திக்கொண்டான். காலிலே இருந்த பூட்ஸ் பழையதானாலும், அது நகர நாகரிகத்தின் சின்னமல்லவா! அப்படி ஒரு பூட்ஸ் தன் காலில் இருப்பதற்காக அவன் பெருமைப்பட்டான். பெட்டியைத் தூக்கிக்கொண்டு 'நாகரிக'மாக நடந்தான்.

திருச்சி ஜாபர்ஷா தெருவில் ஒரே ஒருவரை மட்டும் அவனுக்குத் தெரியும். ஆமாம்; திருச்சி நகரிலேயே அந்த ஒருவரைத் தான் அவனுக்குத் தெரியும்! தெரியுமென்றால் நேரில் பார்த்துப் பழகியல்ல. இரண்டு மாதங்களுக்கு முன்னால் அவன் ஒரு கதை எழுதினான். அந்தக் கதையை திருச்சி ஜாபர்ஷா தெருவிலிருந்த பத்திரிகை ஆசிரியருக்கு அவன் அனுப்பிவைத்தான். அவர் அதைக் கொஞ்சம் திருத்தம் செய்து பிரசுரித்துவிட்டார். அதனால் அவனுக்கு அவரைத் தெரியும். அவர் வீட்டிற்கு அவன் சென்று தன்னைத் தானே அறிமுகப்படுத்திக் கொண்டான். அவர் மிகுந்த மகிழ்ச்சியோடு அவனை வரவேற்றார். சாப்பிடச் சொன்னார். அவனுக்கு இதெல்லாம் அதிசயமாக இருந்தது. தன்னைப் பற்றிய நம்பிக்கை அவனுக்கு வளர்ந்தது. அவர் சொன்னதை மறுக்காமல் அவன் சாப்பிட்டான். மறுத்தால் பட்டினியல்லவா கிடக்க நேரிடும்! அவன் கையிலிருந்தது எட்டே அணா. அடுத்த வேளைச் சாப்பாடு எங்கேயோ! அவன் நிம்மதியாகச் சாப்பிட்டான். அந்த நண்பர் ஒரு பார்ப்பனர். சமரச நோக்கமுடையவர். அவருடைய அன்னையார் அன்பின் வடிவம். அவரது மனைவியார் அன்பும், பண்பும் நிறைந்தவர். தங்கள் அருகிலேயே அவனை வைத்துச் சாப்பிடச் செய்தார்கள். சாப்பிட்டு முடித்ததும் 'எது விஷயமாகத் திருச்சிக்கு வந்திருக்கிறீர்கள்!' என்று கேட்டார் அவர். ஒரு பெரிய எழுத்தாளனாக ஆவதில், தனக்குள்ள ஆசையை அவன் வெளியிட்டான். உடனே அவர், வானொலி நிலையத்திற்கும் இரண்டு பத்திரிகை நிலையங்களுக்கும் சிபாரிசுக் கடிதங்கள் கொடுத்தார். அதை எடுத்துக் கொண்டு அவன் எல்லா இடங்களுக்கும் ஏறி இறங்கினான். ஆமாம்; ஏறினான், இறங்கினான். அவ்வளவு தான்! வேலை



கிடைக்கவில்லை. அது மட்டுமல்ல, 'நீயாவது, கதையாவது, எழுதவாவது?' என்றுதான் எல்லோருமே சொன்னார்கள். ஒரே ஒருவர் மட்டும் 'கதை எழுதுவது சரிதான், அதிலேயே வாழ்க்கையை நடத்துவது என்பது தமிழ்நாட்டில் முடியாது. கதை வேண்டுமானால் எழுதிக் கொடுங்கள். பிரசுரிக்கிறோம். காசு கொடுக்கமாட்டோம்' என்றார். 'கதை பிரசுரமானால் கூடப் போதுமே!' என்ற எண்ணம் அவனுக்கு இருந்தது. யாராவது இலவசமாகச் சாப்பாடு போட ஒப்புக்கொண்டிருந்தால், அவனும் இலவசமாகவே கதை எழுதித் தந்துகொண்டிருப்பான். இதற்கு ஆளில்லை. ஆகவே அதற்கும் வழியில்லை. இரவில் அவன் திரும்பி அவரை வந்து பார்த்தான். 'இதற்குமேல் நான் என்ன செய்யமுடியும்? என்னுடைய நிலைமையும், நன்றாயில்லை. இருந்தால் எவ்வளவோ

கண்ணதாசன் ஆகஸ்டு நிகழ்ச்சிகள்

◉

ஆகஸ்ட் 10 காரைக்குடி.
,, 11 ,,
,, 17 வியாசர்பாடி, சென்னை.
,, 20 ஆலந்தூர்.
,, 27 சென்னை, சூளை.
,, 30 காலை திருமணம்- கோவை.

செய்ய ஆசை?' என்று அவர் கூறிவிட்டார். பெட்டியை அவர் வீட்டில் வைப்பதற்கு மட்டும் அனுமதி கேட்டுக்கொண்டு, பெட்டியை வைத்து அவன் வெளியேறினான். ரத்தின வேலுத் தேவர் மன்றத்தின் அருகிலிருந்த பூங்காவில் வந்து அமர்ந்தான். கவலையும் பயமும் அவனை ஆட்கொள்ளத் தொடங்கின. கையிலே நான்கணாவே மிச்சமிருந்தது. என்ன செய்வது என்று திகைத்து யோசித்துக் கொண்டிருந்தான். அதுவரை அவன் சந்தித்த பத்திரிகாசிரியர்கள், அவன் ஒரு எழுத்தாளனாக ஆகவே முடியாது என்று கூறியிருந்தார்கள். எட்டாவது வரை படித்தவர் எழுத்தாளராக ஆக முடியுமா என்றுகூட ஒருவர் கேட்டிருந்தார். ஆனாலும் அவனுக்கு நம்பிக்கை இருந்தது. எழுத்தாளராவதற்குப் படிப்புத்தான் தகுதியா?-அவன் நம்பவில்லை. படிப்பு வேறு, சிந்தனை வேறு என்பதில் அவனுக்கு திடமான நம்பிக்கை இருந்தது. சிந்தனையை ஒழுங்காகச் செயல்படுத்தத்தானே மொழி! அந்த அளவு அவனுக்கு மொழி அறிவு இருந்தது. பயத்தின் வாய்ப்பட்டிருந்த சிந்தனையை மீண்டும் அவன் துணிவுக்குக் கொண்டுபோனான். தான் ஒரு எழுத்தாளனாகவும், கவிதை எழுதுபவனாகவும் ஆகியே தீருவது என்று முடிவு கட்டிக் கொண்டான். இரண்டு நாட்கள் பசி, பட்டினியோடு திருச்சி நகரத்தை வலம்வந்தான். திருச்சி அவனுக்குச் சலித்தது. கருணை உள்ளவர்களே திருச்சியில் இல்லை என்பதுபோல் தோன்றிற்று. அடுத்த நாளே அவன் சென்னைக்கு ரயிலேறிவிட்டான். 'டிக்கட்' இல்லாமல் ரயிலில் பிரயாணம் செய்வது தவறு என்பது அவனுக்கும் தெரியும். அவ

னிடம்தான் பணம் இல்லையே அவன் என்ன செய்வான்? ரயிலில் அவனும் ஏறி உட்கார்ந்து கொண்டான். ஒவ்வொரு நிலையத்திலும் வண்டி நிற்கும்போது அவன் நெஞ்சம் படபடவென்று அடித்துக்கொள்ளும். பரிசோதகர் வந்துவிடுவாரோ என்று மெல்ல மெல்ல எட்டிப்பார்ப்பான். புகைவண்டித் தலைவர் (கார்டு) அந்தப் பக்கம் வந்தாலும் அவன் நெஞ்சம் நடுங்கும். ஆனால் அவனுடைய நல்ல காலம், சென்னை எழும்பூர் வரும் வரை யாரும் அவனைப் பரிசோதிக்கவில்லை. பரிசோதகர்கள் மிகவும் நல்லவர்கள்! 'டிக்கட்' இல்லாதவர்களை அவர்கள் தொல்லைப்படுத்துவதில்லை போலிருக்கிறது என்று எண்ணிக்கொண்டான். எழும்பூர் நிலையத்தில் இறங்கியாகிவிட்டது. இனி வெளியே போவது எப்படி? அது சுலபமல்ல. வெளியே போக ஒரு வழிதான் உண்டு. அங்கேயும் பரிசோதகர் நிற்பார். அவன் சுற்று முற்றும் பார்த்தான். தண்டவாளத்து ஓரமாகவே நடந்து நிலைய வரம்பு கடந்தவுடன் கரையேறிவிடலாமா என்று யோசித்தான். அவன் கையில் பெட்டியிருந்தது. பெட்டி உள்ளவனெல்லாம் பிரயாணி என்பதுதான் ரயில் நிலையத்து விதி! பெட்டியோடு நடக்கும்போது ஏவராவது பிடித்துவிட்டால்? இந்த யோசனை முன் வந்த யோசனைக்கு முடிவுகட்டிற்று. அது வெள்ளைக்காரர்கள் நாட்டை ஆண்ட காலம். அதாவது இறுதிக்காலம். 1943-ன் தொடக்கம். அப்போது போலீசாருக்குக் கொஞ்சம் அதிகாரம் இருந்தது. குடிமக்களுக்கு அவர்களிடம் பயமும் இருந்தது. அவர்களுக்கும் கொஞ்சம் தைரியம் இருந்தது. அந்தக் காலத்தில் அவனுக்கும் போலீஸ் என்றால் கொஞ்சம் நடுக்கம்தான். ஏதோ அடுத்த ரயிலுக்குக் காத்திருப்பவன்போல, மெதுவாகப் போய் ஒரு மூலையில் பெட்டியோடு உட்கார்ந்துகொண்டான் அவன். ஒரு அரைமணி நேரத்திற்குப் பிறகு நிலையம் வெறிச்சோடியது. பரிசோதகர் பழைய டிக்கட்டுகளை மூட்டை கட்டிக்கொண்டு புறப்பட்டுவிட்டார். அதைக் கவனித்த அவன் கம்பீரமாக நிலையத்தைவிட்டு வெளியேறினான்.

இது சென்னை நகரம். இதுவரை இந்த நகரத்தை அவன் படங்களிலேதான் பார்த்திருக்கிறான்.

'சாயங்கால நேரத்திலே
சமுத்திரக்கரை ஓரத்திலே
மாயமான கம்பம் ஒண்ணு
மனுசப்போலவே.....'

பாடுவதை அவன் கேள்விப்பட்டிருக்கிறான். சென்னைத் தெருக்களைப் பார்த்து அவன் பிரமித்தான். மனிதர்கள் அவசர அவசரமாக நடப்பதையும், கார்கள் வேக வேகமாக ஓடுவதையும், ரிக்ஷாக்கள் துள்ளிக் குதித்துக் கொண்டு செல்வதையும் பார்த்த அவன், சென்னையின் சுறுசுறுப்பை எண்ணி வியந்தான்.

அப்படியே கால் நடையாகவே வழிநெடுக ஒவ்வொருவரையும் பாதை விசாரித்துக்கொண்டே பிராட்வேக்கு வந்தான். அங்கே அப்பொழுது சிறப்பாக நடந்து கொண்டிருந்த ஒரு பத்திரிகையைப் பற்றி அவன் கேள்விப்பட்டிருந்தான். அந்தப் பத்திரிகை அலுவலகத்திற்குச் சென்றான். படபடக்கும் நெஞ்சோடு பெட்டியைத் திறந்து, கதை எழுதிய நோட் புத்தகம் ஒன்றை எடுத்தான். உள்ளே சென்று ஆசிரியரிடம் நீட்டினான். அப்பொழுதுதான் அவர் ஓங்கிச் சிரித்ததும், உனக்கென்ன தெரியும் என்று கேட்டதும்!

அந்தச் சிரிப்பை அவனால் மறக்கமுடியவில்லை. திருச்சிதான் ஒதுக்கித் தள்ளிற்று; சென்னையுமா? அவனுக்கு அழுகையே வந்துவிட்டது. தொடர்ச்சியாக இரண்டு நாள் பட்டினி கிடந்ததால் தாளமுடியாத பசி. நெடுந்தூரம் நடந்ததால் கால்களில் கடுமையான வலி. அவன் மூளை கிறுகிறுத்தது. எழுத்தாளனாகும் ஆசை மறைந்தது. பிழைத்தால் போதும் என்கின்ற எண்ணம் வளர்ந்தது. அவனது நெருங்கிய உறவினர் ஒருவர் அதே தெருவில் இருந்தார். அவரைப் போய்ப் பார்க்கலாம் என்று அங்கே போனான். உள்ளே நுழைந்ததும் நுழையாததுமாக அவர் கொடுத்த வரவேற்பு 'ஏன் வந்தாய்?' என்ற கேள்வியோடு தொடங்கிற்று. அவன் நன்றாகவே அழுதுவிட்டான். அவர் இரங்குவதாக இல்லை. அவன் சிறுவயதில் சுட்டித்தனங்கள் செய்தவன். யாரையும் எதிர்த்து எதிர்த்துப் பேசிப் பழகியவன். ஆகவே அவனுக்குத் தெரிந்தவர்களில் கருணை காட்டுவோர் குறைவாகவே இருந்தார்கள். அந்த உறவினர் அவனை வெறுத்தவர்களில் ஒருவர். 'இப்பொழுதே வெளியே போ! இங்கு காலடி எடுத்து வைக்காதே' என்றார். ஒருவேளை சாப்பாடாவது சாப்பிடச் சொல்லி அனுப்பமாட்டாரா என்று அவன் எண்ணினான். அவனது பசியை அவர் அறியமாட்டார். அறிந்திருந்தால் உணவிட மறுக்கும் அளவுக்குக் கொடியவரல்ல அவர். சத்தம் போட்டுவிட்டுக் கதவைச் சாத்திவிட்டு உள்ளே போய்விட்டார் அவர். அந்த வருங்கால எழுத்தாளன், சோகத்தின் மொத்த வடிவமாக தலையில் கையை வைத்துக்கொண்டு அங்கேயே உட்கார்ந்துவிட்டான்.

— அடுத்த இதழில் முடியும் —

தென்றல்

வாழும் மொழியில் வாழா மொழி!

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை, எம்.ஏ., எல்.டி.

3

உண்மையில் வடமொழிப் பற்றாளர் கூறுகிறபடி வடமொழிச் சொற்களைத் தமிழில் திருத்தமாக எழுதவேண்டுமானால், தமிழ் ஆட்சி மொழிக்கு, குறிப்பிடும் நான்கு வடமொழி எழுத்துக்களை (ஷ, ஜ, ஸ, ஹ) மட்டும் தமிழில் எடுத்துக் கொண்டால் போதாது. இதனை நாம் மேலே எடுத்துக்காட்டிய 'ஈசுவரன்', 'சாசுவதம்,' 'சங்கரன்' ஆகிய சொற்களின் திருத்த முயற்சியால் விளைந்த குளறுபடிகளே நன்கு எடுத்துக்காட்டும். புகுத்தீடு செய்யும் நான்கு எழுத்துக்களை ஆறு எழுத்துக்களாக, எட்டு, பத்து எழுத்துக்களாகப் பெருக்கினாலும், வடமொழியைத் திருத்தமாக எழுதப் பயன்படமாட்டா. இது வடமொழிப் பற்றாளர் அறியாததன்று. நாலு எழுத்துப் புகுத்தீடு வெற்றி கண்டுவிட்டால், பின் அம்முறையே நாற்பதும், நானூறும் படிப்படியாய்ப் புகுத்தி தாய்மொழி வாழ்வை, வடமொழி வாழ்வாக மாற்றிவிடலாம் என்பதே அவர்கள் தொலையறிவும், இனப்பொறுமையும் மிக்க நைப்பாசை - ஆயிர இரண்டாயிர ஆண்டுகளாக அவர்கள் உள்ளத்தில் ஊறி இருந்துவரும் இன ஆவல்-இன்னும் ஆயிர இரண்டாயிர ஆண்டுகளானாலும் மறவாது அடுத்தடுத்தபடிகளில் முன்னேறும் வியத்தக்க குழுநல அவா.

முழுத்திருத்தம் ஏற்படத் தமிழில் இல்லாத வடமொழி எழுத்துக்கள் அத்தனையும் மொத்தமாக இறக்குமதி செய்யப்பட்டாக வேண்டும். இதுவே வடமொழிப் பற்றாளர் இனஅவாத் திட்டத்தின் முழுமையான இரண்டாம் படியாகும். அதன் ஒரு சிறு கூறே, முளைமுகமே, ஒட்டக மூக்கே நாலு எழுத்துப் புகுத்தீடு.

எல்லா வடமொழி எழுத்துக்களையும் தமிழில் புகுத்தீடு செய்வதே வடமொழிப் பற்றாளர் முழுத் திட்டத்தின் இரண்டாம் படி என்பதைப் பெரும்பாலான தமிழர் அறியமாட்டார்கள். அவர்கள் அறியாமையே இத்தகைய புகுத்தீடுகள் படிப்படியாக வெற்றியடைவதற்குரிய இரகசியமும் ஆகும். அயற் பண்பாட்சியில் தமிழ்ப் பற்றுடைய அறிஞர், சிறப்பாகப் பிறமொழிப் பயிற்சியால் அல்லது பற்றால் உயர்வுற்ற அல்லது மதிப்புப் பெற்ற அறிவாளிகள் மிகச் சிலராகவே இருப்பர். அவர்கள் விளக்கத்தின் பின்னும் பலர் மொத்த இறக்குமதி ஒரு நீண்ட காலத்திட்டம் என்பதை ஏற்கத் தயங்கவே செய்வர். வடமொழிப் பற்றாளரும் தம்மைப் போன்ற உள்நோக்க மற்ற தமிழரே என்ற எண்ணத்தால், ஒரு சிலர் அவ்வடமொழிப் பற்றாளருடன் சேர்ந்து அத்தகைய திட்டம் இடையவே கிடையாது என்று மறுக்கவும் துணிவர். ஆனால் இத்தனை வகையினரும் தமிழக எல்லை கடந்து பார்வையைச் செலுத்தினால், அத்திட்டத்தின் மெய்யுருவைக் கண்முன்னேயே காணலாம். தமிழ் தவிர, மற்றெல்லாத் தமிழினஞ் சார்ந்த தென்னக மொழிகளிலும் வடமொழிச் சொல் புகுத்தீட்டுப்படி போலவே, வடமொழி எழுத்துப் புகுத்தீட்டுப்படியும் முற்ற முழுக்க வெற்றியடைந்துவிட்டன-இன்றல்ல, ஆயிர ஆண்டுகட்கு முன்னிருந்தே வெற்றியடைந்துவிட்டன!

மொழியாராய்ச்சித் துறையில் [illegible]கி நோக்கினால், வடமொழியின் எவ்வெழுத்துப் புகுத்தீட்டுப்படி தென்னகத் தமிழின மொழிகளில் மட்டுமல்ல, தென்கிழக்காசியத் தாய்மொழிகள் பலவற்றிலும் வெற்றிகரமாகியுள்ளது என்பது தெரியவரும். சிங்கள மொழியிலும், பாளியிலும், பாகதங்களிலும் கி. பி. 5-ம் நூற்றாண்டுக்குள்ளாகவும், கன்னட தெலுங்கு மொழியில் (பண்டை வடுக மொழியில்] கி. பி. 7 ம் நூற்றாண்டுக்குப் பின்னும், மலையாள மொழியிலும், வட இந்தியத் தாய்மொழிகளிலும் 12 ம் நூற்றாண்டுக்குப் பின்னுமே இப் புகுத்தீடு முற்றுப்பெற்றது.

திருத்த நோக்கத்துடன் நாலு எழுத்துக்களை இவ்வாறு புகுத்தீடு செய்வதைத் தமிழர் எதிர்த்துத் தடுத்து நிறுத்தாது, வாளா அசட்டையாக இருந்தால் ஊசிச்சுமை நாளை உலக்கைச் சுமையாகவும், உலைக்கூடச் சுமையாகவும் வளர்வது உறுதி. ஏனெனில் வடமொழிப் பற்றாளர் முழுநோக்கு முழு எழுத்து இறக்குமதியுடனும் நிற்பதல்ல. இவை முற்றுப்பெற்று முடிந்தமைந்தபின், இலக்கண இயக்கியங்களிலும் முழுதும் வடமொழிச் செல்வாக்குக் கொண்டுவரப்பட்டு, மற்றத் தாய்மொழி வாழ்வுகள் போலவே, தமிழும் மீண்டும் ஒரு புதிய 'வடமொழி' அதாவது பேசா இலக்கிய மொழிக்கு, இடம் தந்து வடநாட்டுத் தாய்மொழிகள் போலப் பண்படாத் தாய்மொழியாய் நலிதல் உறுதி. இது உண்மையில் போதிய ஒரு பக்கம் மக்கள் அறியாமை அவர்களுக்குக் குடிமக்கள் பற்றிய கவலையில்லா நிலையை உண்டு பண்ணுகிறது. சிந்தனையாளர், இனப்பற்றாளர் இவ்விரண்டுக்குமிடையே தோற்றுவதும் அரிது. தோற்றினாலும் வளம் பெறுவது, உயர்வது, மதிப்புப் பெறுவது அரிதிலும் அரிது. அவ்வாறு தப்பித் தவறிப் பிறமொழிப் பற்றாலோ அறிவாலோ உயர்ந்து சிந்தனையும், தனி மதிப்பும் இழவாதவராயிருந்தால்கூட, தன்னல மறுத்து இயேசுவைப்போலத் தாம் உயிரைப் பணயம் வைத்து அழிந்துபடச் சித்தமாயிருக்கும் பொறுக்கிய சிலர் தவிர, ஏனையோரை வடமொழிப் பற்றாளரும், ஆட்சியும் நயத்திலும், பயத்திலும், சூழ்ச்சியிலும், பசப்பாலும் வென்றுவிடல் எளிது. மீந்தவர்களை அழிக்கவோ, மகாத்மாக்களாக உயர்த்திப் பொதுமக்களிடமிருந்து துண்டுபடுத்திவிடவோ, இரண்டும் தவறினால் பிரசாரத்தால் பொதுமக்களிடம் அவர்களை மொழி வேற்றுமையாளர், இன வேற்றுமையாளர் என்று தூற்றிச் செல்வாக்கிழக்க வைக்கவோ செய்துவிடுதல் எளிது.

ஆசிரியர் மறைமலையடிகள் கால முதல் தமிழர் மறுமலர்ச்சி எய்தியுள்ளனர். அதுமுதல் இச்சூழ்நிலைகள் ஓரளவு மாறியுள்ளன. ஆனால் தமிழர் விழிப்பாயிருந்து வடமொழிப் பற்றாளர்களைப்போலவே தொலை நோக்குடைய வடமொழிப் பற்றாளர்க்குக்கூட நன்மையல்ல. ஏனெனில், இன்றும் ஒரு சமஸ்கிருத இலக்கியம் வடநாட்டின் கோடிக்கணக்கான மக்கள் தாய்மொழிகளுக்கு ஆயிரக்கணக்கான ஆண்டு இலக்கியமில்லாக் குறையைப் போக்க உதவாது! வடநாட்டு வரலாற்றின் இப்பெருங் குறையை-கறையை - வரலாற்றாசிரியர் புறக்கணித்தாலும் தேசியவாதிகள் எளிதில் தள்ளிவிட முடியாது.

இரண்டாவதாக : வடமொழிச் சொற்கலப்பையோ, எழுத்துப் புகுத்தீட்டையோ எதிர்ப்பவர்களை வாதத்தால் தம் பக்கம் ஆக்க முடியாதபோது, வடமொழிப் பற்றாளர் அவர்களுக்கு மொழி வெறுப்பாளர், இனவேற்றுமையாளர், வேற்றுமை மனப்பான்மையுடையோர், சாதிப் பகைவர் என்பன போன்ற பெயர்களைக் கூறிப் புறக்கணித்துவிட்டு, அவர்கள் ஒத்துழைப்பில்லாமலே தம் திட்டங்களை வெற்றிகரமாக்குவதில் முனைவர். ஏனென்றால், கீழ்திசையில் நெடுங்காலமாக உள்ள சூழ்நிலையில், சிந்தனை செய்பவர்களையோ, இனப்பற்றாளர்களையோ அவர்கள் ஒரு சிறிதும் பொருட்படுத்த வேண்டிய அவசியமில்லை. வடமொழிப் பற்றாளர்களை ஆதரித்து அவ்வடமொழிப் பற்றாளர்கள் ஆதரவையே நம்பி வாழும் அயல் ஆட்சி, அயல் பண்பாட்சிகள் ஒருபுறம் எவரையும் பொருட்படுத்தாது காரியத் திட்டங்களை நிறைவேற்றக் காத்திருக்கின்றன. மற் நீண்டகாலத் திட்டமிட்டுத் தாய்மொழியின் வழி சென்றுவிடல் நேரிடும். அவ்வழி, நெடுந்தொலை சென்றுவிட்ட தமிழின மொழிகளையும் மீளா அடிமைகளாகவே விட்டுவிடும் நிலை ஏற்படும்.

வடமொழி எழுத்துக்கள் புகுத்தீட்டையோ, அதை உள்ளடக்கிய நீண்டகாலத் திட்டத்தையோ அதன் கூறுகளையோ எதிர்க்கும் தமிழ்ப்பற்றாளர், தமிழினப் பற்றாளர்கள் மொழி வேற்றுமை, இன வேற்றுமை, சாதி வேற்றுமை காட்டுபவர்கள் என்ற குற்றச்சாட்டைப் பல தமிழர் வெறும் வசவுதான் என்று அசட்டையாக விட்டுவிடுகின்றனர். இது தவறு. இக்குற்றச்சாட்டு அறிஞரை அறிஞர் எதிர்க்கும் வாத எதிர்வாதக் குற்றச்சாட்டல்ல. அரசியல் வழக்கு மன்றத்தில் சட்டப்படி முறையிடப்படும் குற்றச்சாட்டுகள்கூட அல்ல. முதலதற்குத் தண்டனை கிடையாது. தண்டனையிலிருந்து மீளும் வகையுண்டு. இரண்டாவது தண்டனைக்குரியது. ஆனால், அது தற்காலிகமான தண்டனையே. அத்துடன் அது குற்றம் சாட்டப்பட்டவரை மட்டுமே தாக்கும். மூன்றாம் வகையான இக்குற்றச்சாட்டுக்கள் பொதுமக்களிடம் பிரச்சார வடிவில் செய்யப்படுபவை. என்றும் உயர்நீதி மன்றங்கள், அரசியல்கள் யாவும் கடந்த உயர்நீதி மாமன்றம், அரசியல் கடந்த இன மாமன்றத்திலேயே இம்முறையீடும் இத்தண்டனையும் நடைமுறைக்கு வருகின்றன. சரியாகவோ தவறாகவோ; நியாயமாகவோ, அநியாயமாகவோ, இம்மன்றத்தில் அறிஞர், சிந்தனையாளர், இனத்தொண்டர், தண்டிக்கப்பட்டால், அத்தண்டனையில் பாதிக்கப்படுவது ஓர் அறிஞனல்ல, ஒரு சிந்தனையாளனல்ல; இனப்பற்று. இனப்பற்றடிப்படையான சிந்தனையோ, தமிழினத்தின் உரிமைத் தன்மதிப்பே! தமிழ்ப் பொதுமக்கள் முன்னிலையில் தமிழே கண்டிக்கப் பட்டுவிடுகிறது. மாணிக்கவாசகர் கதையில் அடிபட்ட ஆண்டியின் வேதனை அகில உலக உயிர்களையும், அடித்தவனாகிய அரசனையும் பாதித்ததுபோல, இத்தண்டனை குற்றஞ்சாட்டப்பட்ட இனப்பற்றாளரையும், இனப்பற்று மரபையும் குற்றஞ்சாட்டப்பட்ட இனத்தையுமே-தமிழினத்தையுமே - நாளடைவில் அழிப்பதாகும்.

தமிழினத்தவராகிய மலையாளிகள், கன்னடியர், தெலுங்கரில்பலர்-பெரும்பாலும் பாமரமக்கள். தாம் தமிழினத்தவரல்ல என்ற முடிபுக்கு வந்துள்ளனர் - வரவிரைகின்றனர் என்பதைத் தமிழர் கவனித்தால், இதன் கோர உண்மை விளங்கும். வடமொழிப் பற்றாளர் போக்கில் தமிழகம் சென்றால், தமிழரே தமிழ்ப் பகைவராகித் தமிழை மறந்து, மறுத்துவிட நேர்தல் கூடும்-ஜூடாஸ் இஸ்காரியட் மட்டுமன்றி, பக்திமான் பீட்டரும் இயேசுவை மறுக்க நேர்ந்தது போல!

தமிழ் இனப்பற்றாளர், வடமொழிப் பற்றாளரின் பல மாய வடிவங்களை அலசிக் காட்டி எதிர்ப்பவர், இனவேற்றுமையாளர்களா? இதைப் பொதுமக்கள் நன்கறிய விளக்குதல் 'தமிழினம் வாழ' இன்றியமையாத நடிவடிக்கை ஆகும். இது செய்யாததாலேயே புத்த சமயம், பிறந்த மாநிலத்தில் அழிந்தது. சமண சமயம் நலிந்தது.

இனவேற்றுமை, இனப்பகைமை கூடாது என்பது பொன்னான நீதி. ஆனால் இது பொதுநீதி. இனம் இனத்தை ஆளும்போது, இனம் இனத்தின் உரிமையைப் பறிக்கும்போது, அந்த ஆட்சியும் கொள்ளையும் எவ்வளவு நயநாகரிகத்துடன், எவ்வளவு தற்காலிக நலங்களின் பசப்புடன் நடைபெற்றாலும் ஆதிக்க இனத்தை ஆட்பட்ட இனம் எதிர்க்காமலிருக்கமுடியாது. இருக்கக்கூடாது. மொழி வகையிலும் இதுபோலவே பொதுவாக மொழி வேற்றுமை, மொழிப் பகைமை கூடாது. ஆனால், ஆதிக்க மொழிகளை வெறுப்பதும், பகைப்பதும் மொழிப் பற்றாளர் தம் மொழிக்குச் செய்யவேண்டிய இன்றியமையாக் கடமைகளில் ஒன்று. ஆதிக்க மொழிகளின் ஆதிக்கம் ஒழியும் வரை, அவ்வாதிக்க மொழிகளை மொழிப்பற்றாளர் உயிர் கொடுத்தும் வெறுத்துப் பகைத்து எதிர்த்துப் போராடியாக வேண்டும். பிரிட்டிஷார்மீது வேற்றுமை வெறுப்பு உணர்ச்சிகளும், பகைமையும் தூண்டுகிறார் என்று காந்தியடிகள்மீது பிரிட்டிஷ் இந்திய நீதி மன்றத்தில் குற்றஞ்சாட்டப்பட்ட சமயம் அவர் கூறியது இதுதான்: "பிரிட்டன் இந்தியாவை ஆளும் வரை அதைப் பகைப்பது, வெறுப்பது-பகைக்கத் தூண்டுவது, வெறுக்கத் தூண்டுவது - என் கடமை; பிறப்புரிமை. அதற்காக என்ன தண்டனை தந்தாலும் ஏற்றுக்கொள்ளுகிறோம். ஏனெனில் அடிமையாட்சி தண்டனையை விட, உயிரைவிட, இன அழிவை விடக்கூட மோசமானது."

(தொடரும்)

பதிவு எண்: எம். 6529

தென்றல்

16 காசு — 10-8-57

திரை செய்திகள்

மகாதேவி

அடுத்து வெளிவரும் எம். ஜி. ஆர். நடிக்கும் படம் 'மகாதேவி' யாகும். அக்டோபர் முதல்வாரம் அனேகமாக அது திரையிடப் படும் எனத் தெரிகிறது.

அவரோடு சாவித்திரி, வீரப்பா, சந்திரபாபு, எம். என். ராஜம், ஏ. கருணாநிதி, முத்துலட்சுமி ஆகியோர் அதில் நடித்துள்ளனர்.

'மகாதேவி'யில் எம். என். ராஜத்திற்குத் தரப்பட்டிருக்கும் பாத்திரம் அவரைத் தலைசிறந்த கதாநாயகியாக ஆக்கும் என்று நம்பலாம். 'மகாதேவி'யில் பெண்களைக் கவரும் அம்சம் ஏராளம் உள்ளதாம். 'கடுகரின்' என்ற மராத்தி ஆசிரியரின் 12 காட்சி நாடகத்தைத் தழுவி, சோழ-சாளுக்கியப் பின்னணியில் அமைக்கப்பட்ட தமிழ் ஓவியம் இது.

திரைக்கதை, வசனம், பாடல்களைக் கண்ணதாசன் எழுதுகிறார். டைரக்ஷன் சுந்தர்ராவ்-நட்கர்னி, இசை அமைப்பு விஸ்வநாதன்-ராமமூர்த்தி.

எம். ஜி. ஆர். புகழை இது மேலும் ஒருபடி உயர்த்தும் என்பது நிச்சயம்.

தங்கப்பதுமை

ஜுபிடர் பிக்சர்சாரின் 'தங்கப் பதுமை'க்காக சமீபத்தில் இரண்டு பாடல்கள் பதிவுசெய்யப்பட்டு, படமாக்கப்பட்டன. கண்ணகி கோயிலின் முன்னே, முழுச் சிலப்பதிகாரத்தையும் நாட்டிய நாடகமாக, தற்போது ரஷ்யா சென்றிருக்கும் பத்மினி ஆடுகிறார். இது படமாக்கப்பட்டுவிட்டது. கண்ணகி மதுரை எரித்த கட்டத்தில் 'செங்கதிர்ச் செல்வனே! என் கணவன் கள்வனா?' என்ற வரிகள் உச்ச சுதியில் போகும்பொழுது, பத்மினியின் நடிப்பு அபாரமாக அமைந்திருக்கிறது. கண்ணகியின் கண்களிலிருந்து ரத்தினங்களைப் பறிக்கும்போது 'மன்னிப்புக் கோரும் விருத்தமும் படமாக்கப்பட்டுவிட்டது. மெய் சிலிர்க்க வைக்கும் இந்தக் காட்சிகளை, வெகு விரைவில் 'தங்கப் பதுமை' உங்களுக்குத் தரும்.

இந்தப் பாடல்கள் கண்ணதாசன் எழுதியதாகும். இசை அமைப்பு விசுவநாதம் - ராமமூர்த்தி; கதை, வசனம் அரு. ராமநாதன், டைரக்ஷன் ஏ. எஸ். ஏ. சாமி.

ராஜாதேசிங்கு

கிருஷ்ணா பிக்சர்சின் 'ராஜா தேசிங்கு' முக்கால் பகுதி

'மகாதேவி'யில் சாவித்திரி.

விக்ரம் புரொடக்ஷன்ஸ் 'குடும்ப கௌரவத்'தில் (தெலுங்கு) ராமராவ்-சாவித்திரி.

(தமிழில்) ஜெமினி கணேசன்-சாவித்திரி.

வளர்ந்துவிட்டான். இதற்காக கண்ணதாசன் எழுதிய காட்சி ஒன்று சமீபத்தில் படமாக்கப்பட்டது. எஸ். எஸ். இராசேந்திரன், பத்மினி ஆகியோர் அதில் நடித்தனர்.

பவானி

எம். ஜி. ஆர்., சக்கரபாணி, டைரக்டர் கிருஷ்ணய்யர், கண்ணதாசன் கூட்டுத் தயாரிப்பில் உருவாகும் 'பவானி', நாலாயிரம் அடிகள் வளர்ச்சியடைந்து விட்டது. சித்திரை வெளியீடாக இருக்கும்.

தென்றல் கலை நிகழ்ச்சி

25-8-'57 ஞாயிறு மாலை 6 மணிக்கு

தியாகராயநகர் வாணிமகாலில்
நடைபெறும்.

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன்
அவர்களின்
—தலைமையும் சிறப்புச் சொற்பொழிவும்—

சங்கீத டைரக்டர் எஸ். எம். சுப்பையா நாயுடு
— வாத்தியக் குழு —

திரைப்பின்னணி பாடக, பாடகியர்
— பாட்டுக்கள் —

ராஜ்-மலர் குழுவின் ராணி மனோரமா
— நாடகம் —

இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் அவர்களின்
— புதிய நாடகம் —

கண்ணதாசன் கம்பராக நடிக்கும் ராஜதண்டனை
— நாடகம் —

டிக்கட் விபரம்:—ரூ. **100, 50, 5, 2, 1**

டிக்கெட் கிடைக்குமிடங்கள்:

தோழியர் **அலமேலு அப்பாதுரை,**
13, அருணாசல ஆச்சாரி தெரு, சென்னை-5.

,, **இராசம்மாள்,**
100, அங்காளம்மன் குளத்தெரு, சூளை.

தோழர் **கோ. இளவரசு,**
23, பசார் ரோடு, சென்னை-14.

,, **இராமசாமி,** செயலாளர் 44வது வட்ட தி.மு.க. சென்னை-4.

,, **தி. சு. நல்லதம்பி,**
திம்ளஸ் ரோடு, பெரம்பூர் பாரக்ஸ்.

,, **பெ. பா. ஏகாம்பரம்,**
115, மார்கெட் தெரு, செம்பியம், சென்னை.

,, **சோ. பாலன்,** செயலாளர், தி. மு. க., ஆலந்தூர்.

,, **ஏ. துரைராஜ்,**
3/60, ஒத்தவாடைத் தெரு, ஆயிரம்விளக்கு.

,, **ஜி. என். சாமி** (சதர்ன் நியூஸ் ஏஜன்ஸி),
நரசிங்கபுரம் தெரு, மவுண்ட்ரோட், சென்னை-2

& **தென்றல் அலுவலகம்,**
2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6.

குறிப்பு:—டிக்கட்டுகளில் குறித்துள்ளபடி **அறிஞர் அண்ணா** அவர்கள் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள முடியாமலிருப்பதற்கு வருந்துகிறோம். அன்று சிதம்பரத்தில் மூன்று கூட்டங்களில் **அறிஞர் அண்ணா** அவர்கள் பேசுகிறார்கள். ★ நிகழ்ச்சிக்கு பொதுச்செயலாளர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டிருக்கிறது.

ஆசிரியர், அச்சிடுபவர், வெளியிடுபவர் கண்ணதாசன், ஏ. எல். எஸ். அச்சகம், 2-127, மவுண்ட் ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.